













ஆனந்த ராகம்















Pax Ravichandra


pax.ravichandra@gmail.com

3-3-2024

அன்புப் படையல்

கண்டு வியந்தேன்-மனம் களி கொண்டு நடனமாட
நட்பைச் சுவைத்தேன்-அன்பை நினைத்தேன்
ஆண்டுகள் பல போனபின்பும்
அழியாத கோலமான நட்பை போற்றிப் புகழ்ந்தேன்





அருகருகே அமர்ந்து கற்றதுவும்-ஆற்றோரம்
கதை பேசிக் களித்ததுவும்
பாடம், படிப்பு, ஆட்டம் பாட்டம் என
விளையாடி வாழ்ந்ததுவும் நெஞ்சில் இனிக்க
இனியொரு காலம் இதுபோல் இல்லை என மனம் தவிக்க-
நட்பின் வசந்தம் பள்ளிப் பருவத்தின் மாறாத சுகந்தம்
இன்றும் நெஞ்சை நிறைக்கும் இன்பம்.

உங்கள் வாழ்த்து மடல் என்னை இன்பக்கடலில் மூழ்கடித்திட
தம்பதியாய் வாழ்த்திய உறவில் நெஞ்சம் நெகிழ்ந்திட-
நீர் பூத்த விழிகளில் நட்பைச் சுவைத்த ஆனந்த நிலைகள்
நெஞ்சில் முக்கனிச் சுவையானதே-நண்பனே
நன்றியால் இதயம் பொங்குதே

இறையருளால் இல்லறம் தழைக்க, இன்பம் பெருக
பல்லாண்டு பல்லாண்டு வளமுடன் வாழ்க
என்றே மனதார வாழ்த்துகிறேன்
நட்பின் பெருமையைக் கற்பாய் போற்றுகிறேன்


உங்கள் நண்பன் *Pax*

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-06-2023

ஆசானும், இரசிகனும்



மழலையின் எழுத்தையெல்லாம் கவிதை எனப்புகழ்ந்து
கவிஞன் என்று வாழ்த்திடும் உறவே,
என்ன தவம் செய்தேன்-உங்கள் அன்பிற்காய்
அரிய உம் நட்பிற்காய்.



பொன்னோ?, வெள்ளியோ? புழுதியோ எனப்
புனைவதையெல்லாம் புடமிட்டுப் பரிசோதித்து-
உறவோடும், உரிமையோடும் திருத்தும்,
ஆசானும், இரசிகனுமாய் நீங்கள்

ஈரவிழிகளோடும், நன்றி சொல்லும்
இதயத்தோடும் நண்பன் நானோ
கற்றது கடுகளவு, கல்லாதது உலகளவு
அறிவுத்தாகம் தீராத என் மனது

என் கவிதை அரங்கேற்றம்- நாளும்
உங்கள் அவையில் நடந்தேற,
உங்கள் வாழ்த்தும், பாராட்டும் என்
எழுத்திற்கு புது மெருகூட்ட
என் நெஞ்சிலே கவிதை -நினைவிலே
நட்பின் புதிய கீதை.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-04-2023

அழியாத கோலங்கள்



அன்றொரு நாள்- முன்னிரவு நேரம்
நிலாக்காயும் காலம், நண்பர்கள் நாம்
ஒன்றாய்க் கூடி, தவளை வேட்டைக்குச் செல்ல-
மனதில் ஒரே கொண்டாட்டம் .

காந்தி சதுக்கம் முதல் கச்சேரிவரை நடையாய் நடந்து-படையெடுத்து
பல ராஜ்யம் வென்ற மாமன்னன் இராஜராஜன்போல்
பல தவளைகளைப் பிடித்தோம்-அதில் ஒன்றோ மிகப்பெரிது-

"ஈதரில்" சாகாது மரணத்தை வென்ற மாவீரனாய்-
பெருந்தவளை துள்ளிக் குதிக்க-
ஆய்வு கூட அண்ணன் பார்தலட் வாய்விட்டுச் சிரிக்க
ஆனந்தமாய் வாழ்க என்றே-தவளையை
விடுவித்து மகிழ்ந்த பொழுது



ஆசிரியர் வராத நேரங்களில்,
"பூவையர் பூங்காவை விட்டு" "ஆடவர் அரங்கில்"
இசைமேதை அன்னதாஸ் "கிட்டார்" இசைக்க
இன்னிசை மன்னன் ஜெகன் பாட
களை கட்டும் ஆண்கள் எம் இன்னிசைக் கச்சேரி

இன்றைய நேயராய் நான் கலந்து
இனிய பழம் பாடல்களை- அமுதக் குரலோன் ஜெகன்
பாடக் கேட்டு மகிழ்ந்த ஆனந்தப் பொழுது.



இறுதி நாள் ஒன்று கூடலில்- வட்டமாய் நண்பர்களோடு
நானும் அன்பராய் கொன்ஸாக மாஸ்டரும்
அமர்ந்திருக்கே-என்னருகே
திடீரென வந்தமர்ந்த வண்ணப்பாவை.

"Oh!, Pax has lost his virginity"
என்று கூவி மகிழ்ந்த கொன்ஸாக மாஸ்டர்
முகம் சிவக்க நாணித் தலைகுனிந்த நங்கையாய் நான்.

"உயிர் மன்றத் தலைவராய் சாந்தராஜ் இருக்க
"மருத்துவமா-பொறியியலா" விவாதம் நடந்திட
கொலினின் அரசியல் பேச்சால்-திசை மாறிய விவாதம்
திண்டாடி தேற்ற உயிரியல் குழாம்.
தோல்வியை ஆற்ற மருந்தின்றி சோகத்தில்
மூழ்கிட்ட மருத்துவ முகாம்

பரீட்சை மண்டபத்தில்-முதல் நாள் மாணவர் இடம் பிடிக்க
நான் அமர்ந்த நாற்காலியைச் சுற்றி நங்கையர் மலர்கோலம்-
என் முகமோ வாடிய மலர்க்கோலம்

முகம் வாட்டத்தை கண்ட உமா டீச்சர்
“வாரும் என்னோடு-இந்த இடம் உமக்கு சரிப்படாது
என்றே ,பூவையர் இல்லாப் பாலையில் இடம் தர”
பூவையர் முகங்களில் பூத்த குறும் புன்னகை.
என்னைப் புரிந்த தாயன்பு உள்ளத்தால்
நெஞ்சிலே மலர்ந்த ஆனந்தப் புன்னகை

“கிளி-பலவற்றை அறிவதை விடுத்து
பரீட்சையில் பாஸ்பண்ணப் பார்-அறிவுத்தேடல் பிறகு
ஆதரவாய் அறிவுரை சொன்ன-அரியரெட்னம் மாஸ்டர்



பின் ஒரு நாள் இரவு கல்லூரியில் கண்டு-
“விதி விசித்திரமானது
விதி இருப்பதை உன்னால் நம்புகின்றேன்- கிளி”
என மொழிந்து அன்பை பகிர்ந்த அழகிய உறவு.

போமலின் கண்களை வருத்த
கண்ணீர் வடிய- சின்னச் சுறாவை அறுத்து-
உற்சாகமாய் படித்த நரம்புத் தொகுதி

ஆய்வுகூடத்தில் ஆய்ந்தறிந்த உப்புக்களின் பரிசோதனைகள்
தவளை எலும்புகளை கண்டு பிடித்து ஞானப்பழத்தை பெற்ற-
விநாயகனாய் குதூகலித்த சாதனைகள்

உயிரின் தோற்றம் பற்றி-டார்வின், டி-விரிஸ், லமார்க் கொள்கைகள்
மேரு மலையை மத்தாக்கி-வாசுகி பாம்பை கயிறாக்கி
தேவர்-அசுரர் என்ற நேர், எதிர் சக்திகள்
பாற்கடல் கடைந்து-அமுதம் எடுத்த செயற்பாடு
பிரபஞ்சத் தோற்றத்தின் இரகசியமாய்த் தோன்ற
இதை ஒரு கொள்கையாய் எழுதிச் சிரித்த நிலைப்பாடு.

அன்னையை-தந்தையாய்-நம்மை நேசித்த ஆசான்கள்
ஆண்டு பல போனபின்பும் நெஞ்சம் மறவாத
அறிவின் அழகிய உறவுகள்

“You are a boring man”-கலாவின் கோபம்
“பேச ஆசை, நீரோ பேசமாட்டீர்- மனோவின் ஆதங்கம்
சுந்தரியின்-சுந்தரப் புன்னகை
இத்துடன் கூட்டம் முடிந்தது- சாந்தராஜின் முடிவுரை



எல்லாம் மாயை தானா-சுகுணாவின் சுந்தரக்குரல்
நிலாந்தியின் நீள்விழிப் பார்வை
நவநீதனின் அகன்ற அழகிய காற்சட்டை
அன்னதாஸின் கறுத்து தடித்த மீசை-
கவிதையாய் ஸ்நேகிதிகளுக்கு
ஆசையாய் போட்ட ஆட்டோகிராப்

தாய்களாய், தந்தையராய் உருமாறி
பெருமரமாய் விழுதுவிட்ட உறவுகள்
தனி மரமாய் நின்றாலும்
இறை அருளால் ஒளிரும் என் இரவுகள்.

நினைத்திட தோன்றும் அழகிய எண்ணக் கோலங்கள்
காலம் மாறினும் இன்றும் -நெஞ்சில் அழியாத வண்ணங்கள்
எலலோரும் நலம் வாழ- இறை தந்த எண்ணற்ற ஆசீர்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-5-2023

இதய அஞ்சலி (15.11.2007 ,,**அழகேந்திரன்**)

உயிர் மூச்சைக் காற்றில் உதறிவிட்டு-கொஞ்சம்
உதிரத்தை பூமியில் சிந்தவிட்டு,
எதிர்பாராத யமனின் அழைப்பை ஏற்று
சொல்லாமலே போனாயே என் நண்பா

வண்ண கனவுகள் காற்றில் கலைய,-எம் எண்ணப் பறவை
சிறகொடிந்து மண்ணில் விழுந்திட, உறவும், நட்பும் கண்ணீர்ப்
பூக்களை உதிர்க்க, யாருக்கு வழங்கி, வாழ்த்துச் சொல்ல
வாடாத மலராய் உன்னைக் காலன் பறித்தான்

ஏற்றி வைத்த நெய்விளக்கும் காற்றில் அணைந்ததென்ன
சூடி மகிழ்ந்த வண்ணப் பூமாலையும் மண்ணில் வீழ்ந்ததென்ன?
ஒரு பூகம்பமாய்-திடீர்ச் சுனாமியாய்-நண்பா
எம் நெஞ்சை உலுக்கிய உன் அகாலமரணம்.

நெற்றியிலே நீறும்-இதழ்களிலோ மாறாத புன்னகையும் வற்றாத
மன்னவனே, கூவித்திரிந்த குயிலாய், ஆடிக்களித்த மயிலாய்,
பழகிக்களித்த தோழனே, உன் ஆட்டமும், பாட்டமும் திடீரென ஓய்ந்திட
இடிதாங்கி இல்லாத எம் இதயத்திலே உன் பிரிவால் ஓர் பேரிடி

கதறித் துடிக்கும் -உன் சொந்தங்களுக்கு
சோகம் சொல்ல வார்த்தைகள் இல்லை
ஆறுதல் சொல்ல எமக்கோ மொழிகளுமில்லை.
ஈரவிழிகளோடு ஊமையான ஏழ்மை நெஞ்சம்

மனைவி மக்கள் கதறி அழுதிட, படைத்தவன் பார்த்துக்
கொள்வான் என்று நீயும் நிம்மதியாய் உறங்கிட,
எம் நெஞ்சம் இளைப்பாற-உன் நெஞ்சத்து
அமைதியில் எமக்கும் கொஞ்சம் தா-கேவும் மனசு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-04-2023

அமிர்தயோகம்-ஜஸ்டின்



வள்ளலாய் நின்றெனக்கு வாரி வாரி, வழங்கியதையெல்லாம்-
ஏழை உள்ளம்தான் மறக்குமோ?-குசேலனுக்கு
கண்ணணாய் கருணை புரிந்த தோழமையை கண்டே
உள்ளம் நெகிழ்ந்தேன்-பெருமானே
வாழி! வாழி! என்றே உங்களைப் புகழ்கின்றேன்



அன்பினால் என்னை ஆட்கொண்டு தந்தையானாய்,
அறிவினால், ஆட்கொண்டு நான் வியக்கும்
சான்றோனாய், புனிதனாய் ஐயா, நீ ஒளிர்ந்தாய்
என் வாழ்வை ஒளிர்வித்தாய்

கொடுத்துச் சிவந்த உன் கரங்களைப் பற்றிட
எனக்கும் வரமளித்தாய், தந்தையாய், நண்பனாய்
என் வாழ்வில் கலந்தே, அன்புத் தாரத்தையும்
தாயாய் எனக்களித்த வள்ளல்
உங்களைப்போல் உலகில் யாருமுண்டோ,



அன்பினால் இன்புற்றேன், நன்றி சொல்ல
மொழியின்றி நா தடுமாற-அன்பிறைவனை
வாழும் உங்களில் கண்டேன்
எல்லாப் புகழும் இறைவனுக்கென்றே
மனம் மகிழத் துதிக்கின்றேன்

தன் குஞ்சிற்கு உணவளிக்கும் தாயாய்
அன்பினால் என்னை இன்புற வைக்கும்
தெய்வங்கள் நீங்கள்-வாழ்க
பல்லாண்டு, பல்லாண்டு வாழ்கவே

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-28-09-2023

அம்மா நீ பல்லாண்டு வாழ்க





ஆசானாய் கண்ட அம்மையோ கலைமகள்
அழகியாய் கண்ட பெண்மையோ திருமகள்
அன்பினால் என்னை இன்புற வைத்த
அன்னையோ உமையவள்

காலங்கள் பல கடந்து போயின
உறவுகள் பல வந்து பாச மழை பொழிந்தன
என் அன்பு உலகில் என்றும் இனியவளாய்
என் தாயாய் இறைவன் தந்த வரம் நீ அம்மா

மகனே என்றழைத்து மகிழ்வித்தாய்
என் சோகத்தில் கலங்கி- தாயாய்
என் கண்ணீர் துடைத்தாய்-கணவரையும்
தந்தையாய் எனக்களித்தாய்





இன்று உங்கள் பிறந்த நாள்-என்றும்
பூவும், பொட்டோடும், மங்கலம் நிலைக்க
வாழ்வெல்லாம் குதூகலம் பொங்க, பல்லாண்டு
பல்லாண்டு வாழ்க வாழ்த்துகிறேன் என் தாயே

வானூரும் நிலவும், தேனூறும் மலர்களும் சாட்சியாக
என் சித்தம், நினைப்பு, செய்கை உள்ளவரை
என் உள்ளம் உங்களை ஒரு போதும் மறவாது தாயே
இறைவனை உங்களுக்காய் வேண்ட மறவாது அன்னையே

பூ முகத்தில் புன்னகை என்றும் மலர்ந்திருக்க-தாய்
இதயத்தில் அன்பும், அமைதியும் என்றும் நிலைத்திருக்க
சச்சித் ஆனந்தமான வாழ்வு வரமாக
வாழ்த்தும் பிரிய மகன்





எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-11-09-2023

அன்னையும் ஆசானுமாகி நின்ற அன்புறவு
உமா டீச்சர்



பிள்ளை கணபதியோ அன்னை உமையவள் பிள்ளை
உமையவளோ-இன்று கணபதிப் பிள்ளைக்கே
மகளான -அதிசயத்தின் எல்லை

விலங்கியலும், இரசாயனவியலும் வியந்து படிக்க-
நாளும் பொழுதும் -மனம் பக்தியோடு தியானிக்க
இன்பவியலாகப் பாடங்களை மாற்றிய ஆசான்



பொன்னில் வடித்தானோ பிரம்மன்? பூவையை
வண்ணப் பூக்களால் வடித்தானோ?
பார்த்து அழகை வியக்க, அன்னையோ பூங்கொடி
அழகிய முறுவலோ அன்பைச் சிந்தும் தாய் மடி-

விழிகளோ கருங்குவளை-வெண்முத்தோ பல்வரிசை
வியந்து பார்க்க அழகோவியம்
பழகிப்பார்க்க தாயோ, அன்பின் காவியம்

பொன்மேனி வாசம் மணக்க, பேசும் மொழியில்
பாசம் பொங்க, நேசமாய் சொல்லித் தந்த பாடம்
எண்ணிட இன்றும் ஏங்கிடும் மனம்

சின்னத் தவளையை பிடித்து வந்தேன் என
அழகு ஸ்நேகிதிகள் செல்லமாய்ச் சீண்ட
எனக்காய் பரிந்துரைத்த தாய்

என் எழுத்தையும், வரை படங்களையும்
என்றும் பாராட்டிய அன்னை-ஓய்வு நாளிலும்
பாடம் சொல்லித்த தந்த அம்மை

மண்புழு, கரப்பான், தவளை. எலி, சுறா என்பவற்றை
அறுத்து உடற்கூற்றை ஆய்வு செய்ய கற்றுத் தந்த அம்மை,
விலங்கியல் மனம் விரும்பிய பாடமாக
சனிதோறும் நடக்கும் பரீட்சை அமுதின் சுவையாக
கல்வியை வேள்வியாய் யாத்த தேவகுருவான அன்னை

தவளை, எலியின்- எலும்புகளை
நுணுக்கு காட்டி வழியே கண்டுபிடித்திட
நுட்பமான பரீட்சை-கண்டு பிடித்திட
குருவின் களிப்பே நான் பெற்ற தீட்சை

உப்புக்களை கண்டு பிடிக்கும் பரிசோதனை
உற்சாகத்தைக் கூட்ட-கற்பித்தலால் கற்றலில் இன்புற்று,
வானம் பாடியாய் கானம் பாடிப் பறந்த காலம்
நெஞ்சில் பசுமை நிறைந்த நினைவானது



என்னிலும் சிறந்த மாணவர் பலர் இருந்தும்
தன் திருமணத்தின்போதும், தலைப் பிரசவத்தின்போதும்
தன் பாடங்களை நான் நடத்திட என்னைத் தெரிந்த குரு
என்மேல் தாய் கொண்ட நம்பிக்கை எத்தனை பெரிதென
பல்லாண்டு போனபின் கேட்டறிந்து மகிழ்ந்த பிள்ளை

இன்றோ தாய் மகனாய் உறவு வளர
அன்னை போனபின்-அன்னையாய்
என்னையும் "மகனே" அழைக்கும்
ஆனந்த அன்புறவு-

ஆண்டுகள் பலபோனபின்பும்-அன்புறவு,
ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேர்விட
தாயாய், தந்தையாய் கணவன், மனைவியின்
அன்பு என்னை அரவணைத்த உறவு

எங்கும் தாய்களை
எனக்கு வரமாய் தந்தே
தன் அன்பை பகிர்ந்த-
இறைவன் கருணைதான் என்னே!

கல்வியெனும் பெருங்கடலில் இன்றும் களிப்போடு தொடரும்
என் பயணத்தில், காலத்தால் அழியாத ஆசான் உறவில்
கற்பகதருவாய், காமதேனுவாய், கல்விச் செல்வத்தை
அள்ளித் தந்த அழகிய வள்ளல் அன்னை உமா

உறவுகளின் பரிணாமத்தில் அன்னைக்கு உயரிடம்
அன்பே என் வாழ்வின் குருபீடம்
என் கவிதைகளின் இரசிகை-என் காதல் கவிதைகள்
கண்டு வியக்கும் மங்கை, தன் காதலை எனக்கு சொல்லிய
ஸ்நேகிதி, கவிதையாய் அவர் காதலை நான் வடிக்க
படித்து பாராட்டிய அம்பிகை


காலங்கள் போனாலும், மறவாத நெஞ்சம்
கருத்தில் அன்னையாய், ஆசானாய்
நெஞ்சம் பூஜிக்க-உமையவளான அம்மையோ
தாயான தெய்வம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப்புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-28-09-2023

என் பிரியமானவனுக்கு



இறைவன் தந்த இன்பக் கொடை நண்பா, நீ
ஆண்டுகள் பல கழித்தும் இளமை மாறாத
இதயம் ஒழுகிடும் கற்பாய் நம் நட்பு.
சுருதி பிசகாத அபூர்வ ராகமாய் நம் உறவு



கல்லூரியில் தொடங்கிய வாழ்வுக் கலையான நட்பு
காலம் செல்ல வெவ்வேறு பாதைகளில் நம் வாழ்வு
குன்றாத சுவையோடு இன்றும் இனித்திட-கைகோர்த்து
நடைபோடும் காலத்தால் அழியாத நம் உறவு

உள்ளம் மறவாத நட்பு உயிரோடு கலந்த உறவாகித் தழைக்க
வானாய் நிலைக்க ஆண்டுகள் ஐம்பது கடந்தும்
இளமை மாறால் இனிக்க -நூற்காத தவத்திற்கு
இறைவன் தந்த அரிய வரமாய் உன் உறவு

இனியவனே உன் அன்பு முகமும் அழகிய நட்பும்-இன்றும்
என் நெஞ்சுக்குள் தேனாய் இனிக்க- இதயத்தில் நிலாவாய் உலவ
மாறாத உன் புன்னகையும் மாசில்லா உன் மனைவியின் நேசமும்
நெஞ்சை நெகிழவைக்க, விழிகளில் துமிக்கும் ஆனந்தக் கண்ணீர்

நலமோடும் வளமோடும் பல்லாண்டு வாழ-
எல்லாம் வல்ல இறைவனை வேண்டி
உன் பிறந்த நாள் இன்று
மனம் மகிழ்ந்து பரவசத்தோடு வாழ்த்தும்
உன் நண்பன்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-7-2023

6th March 2020.

அன்பே லைக்கா-4

நினைக்குந்தோறும் நினைவில் பூ மணக்கும்
அணைக்குந்தோறும் மேனி களிப்பால் புல்லரிக்கும்
அன்பைச் சுவைக்குந் தோறும் நெஞ்சில் தேன் சுரக்கும்-
அன்பே லைக்கா இன்றோ உன் பிரிவைத் தாங்காது
அனலில் விழுந்த புழுவாய்த் துடிக்கும் என் இதயம்



விழிக்குளத்தில் நீர் மலர்கள் பூத்திருக்க
விம்மிடும் நெஞ்சில் சோக எரிமலை விழித்திருக்க
கனத்திடும் இதயமோ பாலையாய் தகித்திருக்க
உன்னை பிரிந்து ஒற்றை குயிலாய் புலம்பும் நெஞ்சம்



மந்தமாருதமாய் என் உயிர் மூச்சில் கலந்த உறவே
என் வாழ்வில் இன்று ஏன் இந்தச் சோகச் சண்டமாருதம்
அமுதாய் என் வாழ்வில் இனித்த உறவே
என் வாழ்வில் ஏனிந்தக் கொடிய ஆலகாலம்

மானே, நீ போனபின் என் இதயப் பூவனம் காடானது
தேனே, நீ மறைந்த பின் என் நெஞ்சம் வாடிய பூவானது
வான்மதியே, நீயின்றி என் வானம் இருளானது
பூபாளமே, உன் பிரிவால் முகாரியே என் இதயராகமானது

நீர் சிந்தி விழிகள் நிறம்மாறிச் சிவந்திட-கார்மேகக்
கொடை காணாத நிலம்போல் மனம் காய்ந்து வெடித்திட
நொந்த இதயம் -தந்தியறுந்த வீணையாய் அழுதிட
சுனாமிபோல் தாக்கிய உன் பிரிவு

தெருமுனையில் என் காலடி ஓசை கேட்டு-வீட்டுக்குள்ளே
அன்னையைச் சுற்றி வந்து உன் களிநடனம்-வாயிற் கதவைத்
திறக்க முன்னங்கால்களால் கட்டியணைத்து-முத்தமழை
பொழிந்து அன்பைச் சொல்லும் ஆனந்த நர்த்தனம்

அன்னைக்கு கேட்காத என் காலடிகள்
உன் அன்புச் செவிகளுக்கு கேட்ட இன்ப நாயனம்
அன்னைக்கு என் வரவைச் சொல்ல-
வீட்டுக்குள் உன் ஆனந்த நர்த்தனம

அன்பைச் சொல்ல என்னைக் கட்டியணைத்து
உன் இன்ப ஆலிங்கனம்-இன்றோ
பிரிவைச் சொல்ல என் விழிகளிலோ
கண்ணீர் பூக்களின் ஊர்வலம்

உள்ளம் நெகிழ, உருகி விழிகள் நீர் சிந்த
அன்பு உறவும் கலைந்த இன்பக் கனவானது
வான் நோக்கிய ஈர விழிகள்-இறைவா
நீ தந்தாய், நீ எடுத்தாய்
எல்லாப் புகழும் உனக்கே ஜெபமானது

ஒரு நாள் ஓசையின்றிக் கதவைத் திறந்து-வீட்டைச்
சோதனையிட வந்த விசேட அதிரடிப் படை-முன்னங்
கால்களால் தழுவி முத்தமிட்டு அன்பைச் சொன்ன லைக்கா
சத்தம் கேட்டு நான் வெளியே வந்த எனக்கோ ஆச்சரியம்

உங்கள் நாயின் அன்பு -உங்கள் நல் உள்ளத்திற்கு சாட்சி
வீட்டைச் சோதனையிடத் தேவையே இல்லை
அன்போடு கூறி-லைக்காவைத் தடவி
விடைபெற்ற விசேட அதிரடிப் படை அதிகாரி

வானூரும் நிலவும், தேனூரும் மலர்களும்
கரை வந்து மோதும் அலை கடலும் சாட்சியாக
என்னுயிர் இருக்கும் வரை-என் இதயம்-அன்பே
உன்னை ஒரு போதும் மறவாது

நண்பா நாயல்ல நீ -என்னை நேசித்த
இன்னோர் தாய் நீ- தன் அன்னை என்னோடு பகிர
அன்பு இறைவன் தந்த பெருங்கொடை நீ

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17-04-2023

அன்பு நண்பனே

புள்ளி வைக்காது கள்ளம் கபடமற்ற அன்பில் போட்ட
மலர்க்கோலம்-பள்ளி நட்பு, ஆண்டுகள் பலபோனபின்பும்
அழியாத கோலம், நட்பினால் எரியும் அணையாத தீபம்

கள்ளம் கபடம் அறியாத பிராயத்தில்
கல்வியும், விளையாட்டுமான வாழ்வில்-இறை ஈந்த
கொடையாய் இன்று வரை நிலைக்கும் நட்பு



பள்ளி வாழ்வும் கலைந்த கனவாக-நண்பராய்ச் சிலரே
நெஞ்சில் நிலைக்க, எண்ணி இன்புற இன்பக் கனவாய்
இனிய நினைவாய் நிலைத்த நட்பு

நட்பு ***எண்ணிக்கையின் பெருக்கமல்ல***
எண்ணங்களின் பரிணாமம்,புரிந்துணர்வின் பேரின்பம்.

பாசமாய் மச்சான் என அழைக்கும் ஜோய்-நேசமாய் ரவி
என அழைக்கும் அன்டன், *Pax* என விளிக்கும் அன்னதாஸ்
என்னடா செய்கிறாய்-ஜெகன், ஐயா என அழைக்கும் கிறிஸ்டி
ரவி என கூவி மகிழும் செயஸ்தியான், ஹலோ ரவி என்னும் சுவி

நட்பின் மற்றோர் பரிமாணத்தில், அறிவுப் பசிக்கு உணவாய்
அறுசுவையிலும் இனிதான அரிய நண்பர்களாய் ஆசான்களாய்
அருட் தந்தையர் மிலர், போல் சற்குணநாயகம், இராஜேந்திரம் ,
றெக்ஸ் ஜோசப் நன்னூல் வழியாய் குருவாய் ஓஷோ

ஒரு மகனாய் பாசமோடு நடத்திய தம்பதிகளாய்
ரிச்சர்ட் பெர்னான்டஸ்-றெக்ஸ் ராணி . ஜஸ்டின் இராஜேந்திரம்
தன் குழந்தையாய் கண்ட வண பிதா ஹரல்ட ஜே வெபர்
அன்பு காட்டிய டெல்மாமோ, ஹேபியர், லோரியோ

அன்போடு பெயர் மாற்றி *Pax* என அழைத்த ஆசான்
சவரி ராஜா மாஸ்டர்

நண்பானாய் என் கவிதைகளுக்கு தோள் தந்தாய்
என் இரசிகனாய் என்னை ஊக்குவித்தாய்-இரசிகனின்றி
கவிஞனில்லை-இரசனையின்றிக் கலைகளுமில்லை

நட்பும் கலையே நண்பா, விழுந்து எழுவதால் நாம் வளர்கின்றோம்
பள்ளிப்பருவ நட்பு ***உதறுகாய் போல் ஒட்டிக கிடந்தது***
காலம் செல்லப், பழகிக் களித்து பாசம் கனிய ***ஓடும் புளியம்பழமாய்***
கருத்துகளுக்கு மதிப்பளித்து மெல்லத் துறவு பூணுகின்றது.?

என்றும் உங்களை புண்படுத்தும் எண்ணம் எனக்கில்லை-
காலம் போகின்றது, இனி காண்போமா என்பது கேள்வியானது
தேடல் என்று ஏதும் எனக்கில்லை, எல்லாம் எனக்குள்ளே
அனுபூதியில் உணர்வதே வாழ்வின் இரகசியம்.

இரு வழிப்பதை வாழ்வு-ஜனனம், மரணம்
ஒரு கதவின் இரு பக்கங்கள்
வாழ்வு அழிவதில்லை-மரணவாசல் வழியே
தொடரும் நிகழ்வு

இறை தந்த அன்புக் கொடையே நட்பு
காலில் முள் தைத்தால் பிடுங்கி விடலாம்
கருத்தில் முள் தைத்தால் புரிந்து கொள்ளலாம்
நட்பை துறந்து விடலாமோ?

உன் நட்போ என்றும் அரிதிலும் அரிதானது.
அன்பைப்போல் உயர்ந்தது ஏதுமில்லை
இறைவனோ தூய அன்பு நிலை
தாயே நாம் காணும் அன்பின் பெருநிலை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

அந்த நாள்

அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே
இந்த நாள் அன்றுபோல் இன்பமாய் இல்லையே
அது ஏன் ஏன் நண்பனே? நண்பனே?



அன்பு மழையின்றி நட்பெனும் நந்தவனம் வாட
உண்டு சுவைத்த மலர்த்தேனை எண்ணி மனம் புலம்ப,
ஒரு மாலைக்குள் உதிரும் மலரோ? வண்ணமும்,
வாசமுமில்லாக் காகிதப்பூவோ நம் உறவு?



புரிந்துணர்வின்றி நம் உறவும் பிரிந்திடுமோ?
ஆணவப் புயலில் வேரோடு சாயும் விருட்சமாய் மாறிடுமோ?
புதியன வந்திடப் பழையன கழிந்திடும் உறவோ?
நட்பும் கற்பில்லா விபச்சார உறவோ?

நேற்றைய எண்ணங்கள் நெஞ்சில் இனிக்க
இன்றைய நிலைமை நெஞ்சைத் தீயாய் எரிக்க
நம்மிடையே நீண்ட மௌனம் நிலைக்க
உறவுகள் சிறுகதைதான் போலும்

“A crowded room is an emplace without you.”
“You are the enchanted dawn of my heart”

காகித உறையின் மேலே எழுதிக் கடிதங்கள்
பரிமாறி கழித்த காலம் கனவானதே!
என் கவிதைகளைப் பாராட்டி எழுது எழுது என
ஊக்குவித்த நட்பூ -குப்பைகளுக்கு விமர்சனம் ஏனோ?
மௌனமும் விமர்சனம்தானோ? பதிலானதோ?

உலகில் மிகச் சிறந்த நண்பன்-விருதளித்து
கௌரவித்தாய் -இன்றோ நம் உறவு விரிசல் கண்டிட
மௌனத்தவம் பூண்டாய்?

ஏதும் நிரந்தரமில்லா இவ்வுலகில் எல்லாம் மாறும்
நம் நட்பும் ஓர் நாள் மீண்டும் தளைக்கும்
அன்பினால் இன்புற்ற நட்பும் அன்பின்றிக் காய
நட்பிட்கும் அமாவாசையோ நண்பா, சொல்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-7-2023

அன்டனும், நானும்

ஓ என் அன்பு நண்பனே, எங்கு போவாய்
என்னைப்பிரிந்து? எங்கு மறைவாய்
என்னை மறந்து?

வானாய் விரிந்த நம் நட்பும் சாகுமோ?
தேனாய் இனிக்கும் நம் உறவும்
நெருப்பில் வேகுமோ? நீரில் மூழ்குமோ?



நீர் எழுதிய விழிகளும் நெருப்பெரியும்
இதயமும் என்னை வாட்டி வதைக்க
ஏன் இந்த சோதனை என் இறைவா?

உன் பிரிவோ நெருப்பாய் என்னைத் தீய்க்க
கண்ணீர் கடலில் இதயம் மூழ்க
பள்ளிப்பராயத்தில் தொடங்கிய நட்பு
பாசமலராய்ப் பூத்த நம் உறவு

ஒரு கொத்து ரொட்டியைப் பகிர்ந்துண்ட நாட்களும்
ஒன்றாய்த் தேனீர் அருந்தித், படம் பார்த்த பொழுதுகளும்
ஆற்றோரம் அமர்ந்து, ஓடும் வெள்ளத்தையும், உறுமீன்
வரக் காத்திருந்த கொக்கையும், உலா வரும் நிலவையும்
இரசித்த பொழுதுகளும் கனவானதே

சித்தர்கள், முனிவர்கள், சோதிடம்,
ஆன்மீகமும் பற்றிப் பேசிக்களித்த இனிய
பொழுதுகளும் பழங்கதையாய் போனதே

கடவுள் தந்த பெருங்கொடையே
கண்ணில் நீர் எழுதி-நட்பைக் கவிதையாய் எழுதி
கடவுளுக்கு நன்றி கூறுகின்றேன்
உன் உறவுக்காய் நம் நட்புக்காய்

எளிமையும், இனிமையுமானவன்
உண்மையின் வாடிவானவன்
உதவிக்கரம் நீட்டும் அரிய உறவானவன்-
அன்டன் என் நண்பன்

ஐயனே உன் நட்போ கல்லில் எழுத்தாய்
என் உள்ளத்தில் பதிந்திருக்க-உன் அன்பை
தேன் கரும்பாய் இதயம் சுவைத்திருக்க-உன் பிரிவோ
என்னை வாட்டி வதைக்கும் நரகானதே நண்பா

நம் இறைவனே உன்னை அழைக்க
உன் துயர் முடிவுற்றதென்று
நன்றியோடு என் உள்ளம் இறைவனைத் துதிக்க
மரணம் தாண்டிய உறவு நம் நட்பு.

சொல்லொண்ணாத் துன்பமும், தோல்விகளும்,
கொடு நோயும் உன் வாழ்வில் -தனியனாய் நின்று போராடி
தளர்வுறாமல் விசுவாசம் காத்த வீரன் நீ

துன்பத்திலும் நட்பைக் கற்போடு காத்து,
கற்கண்டாய்ச் சுவைத்தாய்
என் துயரங்களில் ஆறுதலாய் நின்று
என் கண்ணீரை நீ துடைத்தாய்.

நீயில்லா நட்புலகம் -நிலவில்லாத வானானது
முத்தான நம் நட்பும்-என் நெஞ்சில்
பெருஞ் சொத்தானது, நினைத்துப் புலம்பியழ
உன் அன்போ நினைவானது.

ஓ என் நண்பா தூங்கு, துயர வாழ்வு
முடிந்ததென்று தூங்கு, இனித் துன்பமில்லை
என்றும் இன்பமென்றே நம்பு

வானூரும் நிலவும், தேனூரும் வண்ண மலர்களும்
சாட்சிராக, என் உயிர் மூச்சு உள்ளவரை-நண்பா
என் இதயம் ஒரு போதும் உன்னை மறவாது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-05-2023

நல்லரெத்தினம்



ஆண்டுகள் நாற்பத்தி ஐந்தைக் கடந்தும்
காலாவதியாகாத உறவாய் நம் நட்பு
காலங்கள் கடந்திட- வாழும் தேசங்கள் மாறிட
நட்பு வாழும் இதயம் மட்டும் இன்றும் மாறவில்லை-
பருவங்கள் பொய்த்தாலும்
அன்பு மழை பொழிந்திடத் தவறுவதில்லை



ஆறாத சோகத்திற்கு அருமருந்தாய்-
தீராத தனிமைக்கு உற்ற துணையாய்-
என் எழுத்துக்கு மாறாத பக்கபலமாய்
ஐயனே உன் அன்பு அன்றும், இன்றும்.

இறை தந்த உறவே நம் நட்பூ-மாலைக்குள் வாடும் பூ அல்ல
பூசைக்கான மலர் இது-நான் செய்தாத தவத்திற்கு
இறை தந்த அருள் என்பேன்
எல்லாம் அவன் செயல் என்பேன்

நாளும் நலம் வாழ இனியும் பல்லாண்டு சுகம் காண
வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-16.06.2023

Pax-27.1.2020

நலம் வாழ எந்நாளும் வாழ்த்துக்கள்



துடித்து களைத்த இதயங்கள்-களைப்பாறி
-மீண்டும் இளமைத் துடிப்போடு துடிக்க,
தவித்து துடித்த சொந்தங்கள் மகிழ்ந்து சிரிக்க
காக்கும் கடவுளான இதய மருத்துவர்

காதலாகி துடித்த மனோவின் இதயம், களிப்போடு துடிக்க
காதல் சொன்ன காதலர், நாடியும், நாளமுமாகி
காதல் இதயத்தில் இணைந்து களிக்க
இல்லறம் ஏற்ற நல்லவர் என் நண்பன்

அன்று உயிரா? பொறியியலா? விவாதத்தில் தோற்ற
உயிரியல் மாணவர் குழாம்-இன்று மகிழ்ந்து வெற்றிக்
களிப்போடு துள்ளித் துடிக்க-இன்றும் உயிரியல்
குழாம் தலைவராய் உயர்ந்து நிற்கும் இதய வைத்தியர்

இன்றும் வெற்றி சொல்ல் அரும் பணியாற்றும் மருத்துவர்களாய்
மனோ, கலா, நவநீதன், சுந்தரி, அன்னதாஸ் நண்பர்கள்
எண்ணிப் பார்த்திட இறுமாப்புறும் இதயம்
எல்லாப் புகழும் உனக்கே இறவைா என்றே போற்றி மகிழும்

வானுயர்ந்தும் தாழ நின்ற நண்பனை மறவாத நட்பு
ஊர் வரும்போதெல்லாம் உறவாடிக் களிக்கும் உறவு
பல்லாண்டு கடந்தும் பழம் மதுவான நட்பு
காலம் செல்ல கனிந்த பழமாய் இனிக்கும் உறவு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-16.06.2023

என் பிரியமானவனுக்கு

இறைவன் தந்த இன்பக் கொடை-ஐயா உன் நட்பு-
பல்லாண்டு கழித்தும் இளமை மாறாத
இதயம் ஒழுகிடும் கற்பாய் நம் உறவு





இளவயது முதல் கல்லூரியில் தொடங்கிய நட்பு
இன்றும் இளமையோடு இனிக்க
காலத்தே திசைமாறிய வாழ்வு, காலம் கடந்தும்
காந்தப் புலமாய் நிலைத்த நம் உறவு

உள்ளம் மறவாத நட்பு என்றும் உயிரோடு தழைக்க
ஐம்பதாண்டு கடந்தும் எண்ணிப் பார்த்து- மனம் இன்புற
இறைவன் தந்த அரிய கொடையாய் ஐயா நீ எனக்கு

இனியவனே உன் நேச முகமும், பாச நட்பும்
இன்றும் என்றும் என் நெஞ்சுக்குள் தேனாய் இனிக்க-
நிலாவாய் உலாவர, மாறாத உன் புன்னகையும்
மாசில்லாத உன் நேசமும் இறை தந்த ஆசிரே

நினைத்துப் பார்க்கையில் நெஞ்சம் நெகிழ
ஆனந்தக் கண்ணீர் துமிக்க, வாழ்க நண்பா
என்றும் நலமோடும் வளமோடும் பல்லாண்டு
வாழ்க என்று பாசத்தோடு வாழ்த்துகிறேன




சைக்கிள் ஓடக் கற்றுக் கொடுத்தாய்-தாயின் சமாதிக்கு
வண்ணம் பூச, சேமக்காலைக்கு அழைத்துச் சென்றாய்
கடற்கரைக்கு அழைத்துச் சென்றாய்-
என்றும் என் சிந்தனைக்கு மதிப்பளித்தாய்

நட்போடு உறவாடி, சகோதரனாய் என்னையும் எற்று
பல்லாண்டு சென்றும் பரிவோடு நேசிக்கும் உன் அன்பிற்கு
நான் செய்த தவம் ஏது? உறவாய் இறை தந்த வரம் நீ
என்றும் வாழ்க வாழ்கவே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra - 17.06.2023

என் தோழி



குவளை விழிகளில் சோகத்தேன் வடிய
கொஞ்சும் மொழிகளில் நெஞ்சின் கலக்கம் தெரிய
அரியநட்பும் வாடியதேயென்று-
அழுது நின்றாள், என் அன்புத் தோழி

நிலவாய் மலர்ந்து -மலராய் பூத்த "நட்பூ"
முழுமதியாய் மாறுமுன் தேய்பிறைாய் ஆனதோ?
பனி மழையில் நீராடி, புது ஒளியில் கண்மலரக் காத்திருந்த
"நட்பூவும்" கொடுவெயிலில் வாடிப்போனதோ?

உன் கண்ணீரால்-என் கல்மனமும் கரைய
உன் விம்மல் கேட்டு என் பூமனமும் நொருங்க
என் மனமும் மலர்ந்ததடி தோழி
வாடிய பயிருக்கு வான் மழையும் கிடைத்ததடி.

நீர் சிந்திய மலர்விழிகளிலோ நிம் " மதி" உலாவர,
வான் மதி கண்ட அல்லியாய் வாடிய மனமும் பூத்திட,
பொன் முகத்தில் நட்பை காட்டி-பூவிதழில் புன்னகை சூடி
பூமகளும் மலர்ந்தே நடந்தாள்-'நட்பை' கற்பாய்ச்" சூடி.

கையணிய வளையல் அல்ல- நட்பு
காலணிய சிலம்புமல்ல
காதணியத் குண்டலமல்ல-நட்பு
நூலிடை சூட "மேகலையுமல்ல"
சிரசணிய சூளாமணியுமல்ல

இதயம் சூடி மகிழ, இரு மனங்களில் மலர்ந்த
ஐம்பெரும் காப்பியம் கடந்த அரிய "பூ"
நட்பூ அறிவாய் -என் அன்புத் தோழி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

குணம் மாஸ்டர்

அகவை எண்பதைத் தொட்டும்
இளமை குன்றாத அழகிய இளைஞன்
என்றும் பதினெட்டு வயது மார்ககண்டேயர்
அன்போடு நாம் அழைக்கும் குணம் மாஸ்டர்



எழுபதுகளில் நான் கண்ட ஆசிரியர்
உயிரியலே வாழ்வாக-வினா விடை வழிகாட்டி
அறிவுக்கு விருந்தாக-மாணவர் உயர்வுக்காய்- தம்
வாழ்வை அர்பணமாக்கிய வித்தகன்



எழுத்தும் அழகாக, எண்ணமும் உயர்வாக
வரை படங்களோ உயிர்ச் சித்திரங்களாக
மாணவர் வளர்ச்சியே தம் உயர்ச்சி
அண்ணாரின் மாறாத எடுகோள்-புரட்சி

உயிரியலும், தாவரவியலும் உயிர் மூச்சாக-
மாணவர் ஏறி உயர -நின்ற இடத்தில்
ஏணியாய் நின்ற தேவதூதர்

உயர்தர மாணவருக்காய் "உயிர்" பத்திரிகையை
மாதாந்தம் வெளியிட்டு-மாணவர்
எழுத்தும், ஆக்கமும், எண்ணமும் வளர
மாணவரோடு மாணவனான மாகலைஞன்

கல்லூரி நூற்றாண்டு விழா களைகட்ட-ஆர்வத்தோடு
தன் ஆக்கத்திறனை வெளிக்காட்டி அற்புதங்கள் புரிந்த மாயாவி
அன்பும். நட்பும் இழையோட, அழகிய புன்னகை இதழோட
குணத்திலும் இமயமாய், மணத்தில் மல்லிகையாய்
உழைப்பில் தேனீயாய் இன்றும் உழைக்கும் மேதாவி

இயல், இசை நாடகத் தமிழ் வளர்த்து
பாடகர் குழுவே உறவுகளாக, பாடும் மீன் ஆட்டம் போட
மேடைகளில் பாடிக்களித்த வானம்பாடி

சீமைப்ப்பனைக்கு தாவரவியல் பெயர் தேடிக் களைத்து
கிழக்கு பல்கலைக் கழகமும் கைவிரிக்க
கூகுளில் தேடி சளைத்து கூவி தொலைபேசியில் அழைக்க
விடை சொன்ன குரு

காணும்போதெல்லாம் ‘‘மகன்’’ என்றே மனதார
அழைத்து மனம் குளிர நாம் உரையாடல்
‘‘என்ஸைகிளோபீடியா தொகுப்பை’’
இலவசமாய் எனக்கீந்த வள்ளல்

ஒய்வு பெற்றபோதும். உயிரியலே வாழ்வாக-கடின
உழைப்பால் ‘‘உயிரியல் வழிகாட்டி’’உயர்தர மாணவருக்கு
நூலாக, உழைத்து களிக்கும் உன்னத ஆசான்
அபிநய சரஸ்வதியின் அழகிய புத்திரன்



ஒரு முறையல்ல. இருமுறை இதயநோயுற்றபோது
வைத்திய கலாநிதி சாந்தராஜ் -மறுவாழ்வளிக்க-
சாந்தராஜ் என்தன் மாணவன் என, என்னிடம்
புகழாரம் சூட்டி பாராட்டிய பெருந்தகை

பாடிக் களித்த உறவுகள் தேசம் கடந்து பறந்திட
பசுமை நிறைந்த நினைவுகள் நெஞ்சில் நிலைத்திட
காணும்போதெல்லாம் நண்பர்கள் நலம் கேட்கும் தந்தை
மனிதர்குல மாணிக்கத்தின் பெருந்தகை

சற்குணமே நற்குணமான சான்றோன்
குணம் குன்றாத குணரத்தினம்
வாழ்க பல்லாண்டு வாழ்கவே

புரியா தவத்திற்கு இறை தந்த வரமே
நல்லாசிரிய பெருமக்கள்

எல்லாம் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க, எல்லோரும் நலம் வாழ்க
Pax Ravichandra - 17.11.2021

Many More Happy returns of the Day-26.12.2021



பண்பட்ட நெஞ்சம்-இன்புற்று
பல்லாண்டு நலம் வாழ
இறையருளும், அமைதியும்-எந்நாளும்
நதிக்கரையோரச் சோலையாய்
மலர்ந்து மணம் வீச-இனியவனுக்கு
என் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.


நட்பெனும் நந்தவனத்தில் பாடிக்களிக்கும்
சோலைகுயில்-எந்நாளும் பாடி மகிழ
என் வாழ்த்துக்கள்



I wish you all the joy that you can wish on this day.
God bless you My friend
I sincerely thank you for your worthy friendship.
loving
Pax Ravichandra

என் பிரியமானவனுக்கு-ஜோய்

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு-வள்ளுவர்





நன்றி சொல்ல வார்த்தையின்றி நாத்தடுமாற-
இறை கொடை நீ என்று இறைவனை மனம்போற்ற
குசேலனுக்கு கண்ணனாய் நண்பா நீ எனக்கு

படிக்கும்போதும் பாசமாய் என்னை நேசித்தாய்
பலகாதம் கடல் கடந்தும்-இன்றும்
மாறாத பாசத்தோடு என்னை நேசிக்கின்றாய்

இறை தந்த கொடையே என்றும் நீ நலம் வாழ-
இறைவனை வேண்டிட என் நெஞ்சம் மறவாது
இறைவன் நம்மோடு என்பதற்கு -இம்மானுவேல்
உன்னைத் தவிர எனக்கு சான்றேது

நாளும், பொழுதும் உன் வாழ்வு சிறக்க
நலமோடு நீடூழி , நீயும் உன் உறவுகளும்
பல்லாண்டு சீரும், சிறப்போடும் வாழ,
நெஞ்சார வாழ்த்துகின்றேன்



கண்ணில் ஆனந்த கண்ணீர் துமிக்க
உன் அன்போ எனை மகிழ்விக்க
நான் செய்யாத தவத்திற்கு-
இறை தந்த வரம் நீ

வானூறும் நிலவும், தேனாறும் மலர்களும் சாட்சியாக
என் சித்தம், நினைப்பு. செய்கை உள்ளவும்
என் பிரியமானவனே- என்னைப் பிரியாதவனே
என் நெஞ்சம் உன்னை மறவாது


அன்பே சிவம்-வாழ்வே தவம்
Pax Ravichandra

நண்பன்-ஜோய்

குகனுக்கு இராமனாய், குசேலனுக்கு கண்ணனாய்
கர்ணனிற்கு, மன்னன் துரியோதனாய்
தோழமை கொண்டவனோ
-இன்று எனக்கு நண்பனாய் வாய்த்தவன்
தன் வள்ளாண்மையால் -ஏழை
என்னையும் செல்வனாக்கி மகிழ்ந்தவன்.




முடி நரைத்து, உடல் தளர்ந்து, மூப்பு நானடைந்தாலும்-
என் நடை தளர்ந்து, ஊன்றுகோல்தான் கிடைத்தாலும்
ஒளியிழுந்து விழிகள் பார்க்கும்திறன் இழந்தாலும்
மொழியிழந்து ஊமையாய் போனாலும்
என் உயிரில் கலந்த உறவே-உன்னை ஒருபோதும்
என் இதயம் மறவாது



மண்ணில் என்னுடல் மக்கி மறைந்தாலும்
விண்ணில் என்னுயிர் ஓய்வு கொண்டாலும்
நம் உயிர் நட்பிற்கு காலத்தால் அழிவு இல்லை
கண் மறையும் தேகத்தால் மறைவு இல்லை.

நன்றி சொல்ல வார்த்தையில்லை
நட்பைக் கவிபாடத் திறனுமில்லை
உயிர் சுவாசமும், இதயதுடிப்பும் உள்ளவரை
என் உயிர் உன்னை ஒருபோதும் மறவாது

சிறு வித்தாய் என்னுள் நீ விழுந்தே
செந்தேன் மலர்க்கொத்தாய் விரிந்தாய்,
நட்பெனும் தேவசுகந்தத்தை நான் சுவாசிக்க
சுவாசக்காற்றாய் என்னுள் கலந்தாய்,
என்னையும் மணக்கும் சந்தனமாய்
உன் பொன் மார்பில் பூசி மகிழ்ந்தாய்,



மன்னவனே ஆருயிர் நண்பனே
கத்தும் கடலேழும் கருவான் நிலவும் சாட்சியாக
என் சித்தம், நினைப்புச், செய்கை உள்ளவரை
என் உள்ளம் உன்னை ஒரு போதும் மறவாது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-04-2023

கலா சோதி மனம்



பாடிக்களித்த சோடிகுயிலைப்-பலகாலம்
பிரிந்து வாடும் மனம்-
ஒன்றாய்க் கூவிக்களிக்க ஏங்கியே
சூடிக்களிக்கும் மலருக்காய்-
காதல் நோன்பிருக்கும் தினம், தினம்

பள்ளி நிலவோடு பாடம் படித்து, கடைக் கண்ணால்
காதலும் படித்து, புள்ளிக் குயிலோடு கானம் இசைத்து
காதல் நிலவோடு வானில் உலாவரக்
கனாக்காணும் மனம்-காதல் இசை பாடும் தினம்

கொஞ்சிக் கதைபேசி-வஞ்சிக் கொடி
கலாவோடு விழாகாணும்
நாளை எண்ணி- செகசோதி மனம்.
கடல் கடந்து தனியே வாடும் தினம்

காத்திருப்பான் கமலக்கண்ணன் எனக் காதல் மனம் தவித்திட
பூத்து நிற்கும் பூவிழிகள் வாடுமே எனக் காளை மனம் துடித்திட
ஒன்று சேரும் நாளுக்காய் இரு மனங்களும் ஏங்கிட
காதல் இத்துணை இனிதா? எனக் கவிதை எழுதிய
காதலை அறியாத மடக்கவிஞனோ அவன் நண்பன்
பிரம்மச்சாரிகள் சங்கத் தலைவன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-01-05-2023

கல்லூரி நட்பூ

மண்பூக்கும் வாசமலரெல்லாம் ஒரு மாலைக்குள் வாடிட
விண்பூக்கும் -வெள்ளி மலர்களும் விடியலில் மறைந்திட-
மனம் பூத்த நட்போ-நாளும் வண்ணமும், வாசமும் கூடி மணந்திட
நெஞ்சில் பூத்த அதிசய பூவாய் - எங்கள் கல்லூரி நட்பூ



என்னே வியப்பூ-நினைக்க-
நெஞ்சில் தோன்றும் ஆனந்தக் களிப்பூ
கூடிக்கதைபேசிட ஒரே கலகலப்பூ

தாயகம் வரும்போதெல்லாம் தவறாமல் சந்தித்து-
குசலம் விசாரித்து அகமகிழ ஆனந்து உறவாடும் நட்பு.
ஜெகன்-கலா-அன்னதாஸ்-ஷிரானி. கிறிஸ்-ஹாட்ஸ்-நவநீதன்-
நிலாந்தி-பெரேரா-மோகன்-சுபா

பிறந்த நாள் வாழ்த்துச் சொல்ல, ஆனந்தக் கூத்தாடும்
உறவாய் சாந்தி-மனோ தம்பதி, ஊர் வந்தால்
வீட்டிற்கு அழைத்து உண்ணத்தந்து உபசரிக்கும் தாயுள்ளம்
ஒன்றாய் கதைபேசி மகிழும் அன்னை இல்லம்.

தன் சுமையை மறைத்து-என் சுமையாற்ற-
ஆறுதல் மொழிந்த நண்பன் நவநீதன்-
காந்தி சதுக்கத்தில் பலமணி நேரம்
கதைபேசி உறவாடி மகிழ்ந்த இதய கீதம்.

அவசரமாய் வந்தும் என்னோடு உரையாடி
நட்போடு அணைத்து திரும்பிய அன்னதாஸ்
என் நகைச்சவை கேட்டு
வாய்விட்டு சிரிக்கும் அன்புறவாய் ஷிரானி

பண்போடு உறவாடி-பழகிய நட்பு
“என் ஆருயிர் உறவு” என்று
தன் குடும்பத்தை -குசேலன் குடிலுக்கு
அழைத்து வந்த கண்ணண்

கவிதை எழுதத்தூண்டிடும் நண்பனாய்
என் கவிதைகளின் முதல் இரசிகனாய்-கிறிஸ்
மன்னவன் அவையில்- என் கவிதைகள் அரங்கேற
மனம் மகிழ மழையாய் பொழியும் புகழுரைகள்.

கட்டித் தழுவி இதயம் மகிழ உயிரும் மெய்யும் குதிக்க
உறவு சொல்லும் ஜெகன்-எப்போதும் குடும்பப் பாசம்-
எல்லோர் மேலும் அளவில்லா நேசம்.
எம் நட்பை மறவாது-உரிமையோடு என்னை
கோபித்து பாராட்டும் கலா

காணும்போதெல்லாம்-நட்போடு
சுகம் விசாரிக்கும் சுந்தரி
என்னடா செய்ரா உரிமையோடு
கத்திக் கேட்கும்-நவாஸ்

நத்தார் வாழ்தனுப்பி-வரும்போது-ஊர்
வரமுடியாவிட்டாலும்-தொலைபேசியில் பேசி
அன்னையாய் அறிவுரை கூறும் நிலாந்தி

ஹய் Pax என்று கூவி நடுத்தெருவில் கட்டியணைத்து
ஊர் சுற்றி உறவாடி -வீடு வந்து கதைபேசி
கணவன் மனைவியாய் மகிழவைத்து
இன்பம் தந்த மோகன் சுபா தம்பதி

வாழ்வில் உங்களை நண்பர்களாய்ப் பெற
நான் செய்த தவமா இது-இல்லை இறை தந்த வரமே இது
எல்லாப் புகழும் இறைவனுக்கே.
நலம் வாழ வாழ்த்தும் நண்பன்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-1-6.2023

காவிய நட்பூ



உன் குரல் கேட்கும்போதெல்லாம்-நண்பா
என்னிதயத்திலோ தேன்மழை
உன் மடல் காணும்போதெல்லாம்
என் விழிகளிலோ ஆனந்தப் பூமழை

வண்ணப் பூவாய் என்னுள் மலர்ந்து-சுவாசக்காற்றாய்
என்னில் கலந்து-வாழ்வில் வசந்தம் தந்த இனிய உறவே
ஊமைக்குயிலும் உன் நட்பால் கவிபாடும் கோகிலமானது
ஊனமுற்ற கலாபமயிலும்-உன்னால் ஆனந்தக் கூத்தாடுது

கண்பார்த்து நெஞ்செழுதிய கல்லூரி உறவே
மண்பார்த்து விண்பூக்கும் ஒளிமலர்களும்
விண்பார்த்து மண்பூக்கும் வாசமலர்களும் வாழும்வரை
இதயம் பூத்த நம் நட்போ வாடாது, உதிராது, வாசமிழக்காது
உயிருள்ளவரை, ஒருபோதும் உன்னை மறவாது

கண்வழி நுழைந்து என நெஞ்சில் கலந்திட்ட நட்புறவே
மண்ணோக்கி என் தேகம் வாடி வீழ்ந்தாலும்
விண்ணேகும் என் உயிரில் -உன் நட்பு
பூவாசம்போல் மணக்கும் பூந்தேனாய் இனிக்கும்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-10-2023

லைக்கா

என் இதயவானில்-இன்றோர் திடீர் அஸ்தமனம்
என் ஆனந்தப் பூங்காவில் இன்றோர் பூகம்பம்
மண்ணுக்குள் மறைந்ததோ மாறாத சிநேகத்தின் உருவம்
மனதை ஆக்கிரமித்ததோ துயரத்தின் கொடிய பருவம்



நீ சென்ற இடம் தெரியாமல் தவிக்கின்றேன்
நண்பா-உன்னைப் பின்தொடரவும்
பிரியாவிடை சொல்லவும் முடியாமல்
விழிநீர்மலர்கள் பூக்க விக்கித்து நிற்கின்றேன்

இரு கரம் விரித்து இரவு பகலாய் இறைஞ்சி நின்றேன்-
இறைவா என் உறவுக்கு உயிர் கொடு
என் அன்பிற்கு வாழ்வு கொடு என்று



என் வேண்டுதல் பலனின்றிபோக
விழிமூடி நீயும் விடை சொல்லிப்போக- உறவே
ஏன் போனாய் என்னுயிர் கொண்டு-உயிரே
எங்கு போனாய் என்னுணர்வுகளைக் கொன்று?

உன் பிரிவால் என் நினைவெங்கும் ஆறாத ரணம்
என் மனமோ தகிக்கும் பாலைவனம்
விடிவேயில்லாத இரவாய் என் பொழுதுகள்
சோக நெருப்பில் வாடும் நட்பின் நினைவுகள்

என் ஏகாந்த உலகின் இனிய உறவே-நாளாந்தம்
சுவைத்த நட்பெனும் தேவஅமுதே
உன்னோடு இருக்கும் வரை- என்னுள்ளமோ
உவகையின் குடியிருப்பு, உன்னைப் பிரிந்தபின்
என்னிதயமோ வெறுமையில் சிறையிருப்பு.

லைக்கா!என் பிரிய சிநேகிதனே
மண்ணுக்குள் உன்னுடலைப் புதைத்து
மனதுக்குள் உன் அன்பை விதைக்கின்றேன்
என் நினைவுக்குள் முளைத்து- என்றும்
என் நெஞ்சுக்குள் நீ வாழ்வதற்காய்

கங்கையோ கண்வழி பாய-கடும்புயலோ நெஞ்சுக்குள் வீச
என் அன்போ, மண்ணுக்குள், எரி நெருப்போ என் சுவாசத்தில்
மரணமே உனக்கு மரணமில்லையா?-துயரமே
தொடுவானம்போல் தூர விலகிப் போகாயோ?

வசந்தமே நீ போனபின் என் வாழ்வெங்கும் கோடை
என் வழியெங்கும் பீடை
தீயின்மேல் என் பயணங்கள்-தந்தி அறுந்த
வீணையில் என் இதயராகங்கள்

வண்ணமிழந்த ஓவியமாய்,
வனப்பிழந்த பூவனமாய்-மனம் வாடிட
நெஞ்சிலே மாதுயர் சூடிய மாலை,
நினைவோ பசுமை இழந்த பாலை

பாசமலரோ சொர்க்கத்தில்,
பரிதவிக்கும் ஏழை நெஞ்சோ-நரகத்தில்
லைக்கா என் அன்பே-என் இதயம்
உன்னை ஒருபோதும் மறவாது

நண்பனே நாயல்ல நீ-அன்பு
மழை பொழிந்த இன்னோர் தாய்
தனிமைத் துயருக்கு-அருமருந்தான
ஆருயிர் நண்பன்

அன்பைச் சொல்ல உன்னைப்போல் உறவில்லை
உன் பிரிவைத் தாங்க என் நெஞ்சுக்கோ உரமில்லை
நீ போன பின் என் உலகே சூனியம்
உன் உறவோ அன்பின் காவியம்

தொலைவில் என் காலடி கேட்டு-வீட்டில் உன் துள்ளளாட்டம்
வாயிற் கதவைச் சுற்றி உன் களியாட்டம், கதவைத்
திறந்தவுடன் முன்னங்கால்களால் கட்டிப் பிடித்து
முகத்தை நக்கி அன்பைச் சொல்லும் கொண்டாட்டம்

அன்னைக்கோ அதிசயம், சொல்லி மகிழ்ந்த ஆனந்தம்-
இன்று எல்லாம் கனவாக-கனத்த நெஞ்சம் உறவாக,
உன்னை எண்ணி உருகும் என் உள்ளம்
என் விழிகளிலோ கண்ணீர் வெள்ளம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-30-09-2023

மனோ சாந்தராஜ்



கல்லூரி நாட்களில் கலந்து பழகாது
கன்னியர் முகம் பாராது, ஒரு வார்த்தை பேசாது
பிரம்மச்சாரிகள் சங்கம் அமைத்தேன்
கல்வியே வேள்வியாக, காலம் களித்தேன்

தாய் வானகம் போனபின்-புரியாத தவத்திற்கு
வரமாய், எல்லாத் தாய்களிலும்-என்
தாயைக் காணும் பேறு பெற்றேன்.

ஊர் வரும்போதெல்லாம் உவகையோடு அழைத்து
தாய்மையின் அன்போடு உணவளித்து
நட்பினைக் கற்பாய்க் காத்து மகிழ்விக்கும்-
தாயாய், இன்று சிநேகிதி மனோ

குங்குமம் நிலைக்க, மங்கலம் செழிக்க
மணவாழ்வு மணந்தே மகிழ்விக்க
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க
எனப் பாசத்தோடு வாழ்துகின்றேன்

இறை தந்த இனிய நட்பே-எக்
குறையுமின்றி நலம் வாழ
எந்நாளும் என் வாழ்த்துக்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-06-2023

நலம் வாழ எந்நாளும் நல் வாழ்த்துக்கள்



மூன்றாண்டுகளாய்-ஒரு வகுப்பில்
ஒன்றாய் கற்றும்-பேசியதோ ஓரிரு வார்த்தைகள்
பிரியும்போது-ஆட்டோகிராபில் எழுதியதோ
நலம் வாழ நல் வாழ்த்துக்கள்

பல்லாண்டு போன பின்பும் பழகிய நட்பு-
மனோரஞ்சித மலராய் மணம் வீசிட
என் நெஞ்சிலே ஆனந்தக் களிப்பு

ஊர் வரும்போதெல்லாம்-அழைத்து
உண்ணத் தந்து தாயாய் உபசரிக்கும் அன்பு
தை இருபதில் பிறந்த நாள் வாழ்த்து கூறி
மனம் மகிழும் பிள்ளையின் உறவு

மனம் மகிழ மனம் விரும்பியவரே-
மணாளனாய் மாறி மண வாழ்வும் சிறக்க
அறிந்து மகிழ்ந்த உறவு

சூடிய பூவும் வாடாது-பொட்டும், பூசிடும் மஞ்சளும்,
குங்குமமும் கலையாது, காலமெல்லாம் நலமோடும்,
ஆனந்த மகிழ்வோடும் நூறாண்டு தாயே நீ வாழ
இறைவனை வேண்டி, வாழ்த்தும் நட்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29.05.2023

மனோகரன்-அழகிய சிவன்

"மனோ" என்ற அழைப்பில் கனிவும், களிப்பும் இழையோட,
"ஐயா" என்ற பதிலில் பணிவும், நட்பும் இசைபாட
முப்பதாண்டுகளுக்கு மேலாய் நிலைத்த நட் பூ
அந்தி வருமுன் வாடி உதிர்ந்ததென்ன? முத்தய் நெஞ்சில்
பதிந்த உறவையும், மின்னி மறையும் மின்னல் பறித்ததென்ன?



மின்னலாய் மின்னி மறையும் வாழ்வு
நீர்க்குமிழி எனச் சொல்லிட, சோகத் தணலில்
இதயம் வெந்து புலம்பிட, விழிகளில் இன்றும்
காயாத ஈரம், மொழிகளில் ஓயாத முகாரி ராகம்.

அழகிய சிவனோ-என் அன்பு நண்பன் மனோகரன்
எளிய மனத்தவர்க்கு புரியும்- என்னே அவன் பாசம்
என்னே என்மேல் அவன் கொண்ட நேசம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-30.05.2023

மோகன் -நட்பு

இனியவனே, நட்பெனும் நற்கொடை ஈந்தவனே
கல்லூரி கடந்து, காலங்கள் பல போனபின்பும்
கடல் கடந்து வாழும் காலத்திலும், கல்லூரி நட்பை
கற்பாய் காக்கும் உத்தம நண்பனே வாழ்க நீ



என் கவிதைகளைப் பகிரும்போதும், பாசத்தோடு வாழ்த்தி-
என் எழுத்தை ஊக்குவித்து உயிர்கொடுக்கும் இரசிகனே
உன் பிறந்த நாளில், என்றும் நலமோடு பல்லாண்டு வாழ
காதல் துணையோடு வாழ, பிரிய நண்பன் வாழ்த்துகின்றேன்

மஞ்சளும், குங்கும், மலர்ச்சரமும் துணையில் நிலைத்திட
மணக்கப் பூண்ட இல்லறத்தில் அறம், பொருள் இன்பம்
வற்றாது தழைத்திட, அன்பு இறைவனை வேண்டி
வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன்

வானூறும் நிலவும், தேனூறும் மலர்களும் சாட்சியாக
என் சித்தம், நினைப்பும், செய்கை உள்ளவரை
என் இதயம் ஒரு போதும் உன்னை மறவாது.

கல்லூரியிலும், கச்சேரி ஆற்றங்கரை ஓரத்திலும்
கதை பேசிக் கழித்த பொன்மாலைப் பொழுதுகள்
கடவுள் தந்த கொடையானது-கற்பாய்
நிலைக்கும் நட்பும் இறைவன் தந்த அருளானது

பள்ளிப் பருவம்போல் உலகில் இன்பமில்லை
பசுமை நிறைந்த நினைவுகளோடு, பாடித் திரிந்த
பறவைகளுக்கு, வாழ்வு சொர்க்மான உலகு-நட்போ
எண்ணிக் களித்திட என்றும் இன்பமான உறவு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-8-2023

நண்பன்-ஜோய்

புல்லாய் கிடந்தேன், பனித்துளியாய் அணைத்தாய்
பூவாய் மலர்ந்தேன் தேனாய் கலந்தாய்
வானாய் விரிந்தேன், வெண்ணிலவாய் ஒளிர்ந்தாய்
வான்மழையாய் விழுந்தேன் மண்ணாய் நெகிழ்ந்தாய்



நதியாய் ஓடினேன், கடலாய் அணைத்தாய்
பாலையாய் வாடினேன் பூந்தென்றலாய் வந்தாய்-.
நண்பா நீயென்ன தேவனா? -இல்லை உன் நட்பு
ஏழை எனக்கு-இறையீந்த பெருங்கொடையா?

துன்பம் வந்தபோதெல்லாம்-துணையாய் நின்று
இருகரத்தால் அணைத்து என்னைக் காத்தாய்
தெய்வம் தந்த துணையே-உயிருள்ளவரை-என் நெஞ்சம்
உன்னை மறவாது, உன் புகழ் பாட மறவாது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-10-2023

அன்பு நண்பனே

புள்ளி வைக்காது கள்ளம் கபடமற்ற அன்பில் போட்ட
மலர்க்கோலம்-பள்ளி நட்பு, ஆண்டுகள் பலபோனபின்பும்
அழியாத கோலம், நட்பினால் எரியும் அணையாத தீபம்



கள்ளம் கபடம் அறியாத பிராயத்தில்
கல்வியும், விளையாட்டுமான வாழ்வில்-இறை ஈந்த
கொடையாய் இன்று வரை நிலைக்கும் நட்பு

பள்ளி வாழ்வும் கலைந்த கனவாக-நண்பராய்ச் சிலரே
நெஞ்சில் நிலைக்க, எண்ணி இன்புற இன்பக் கனவாய்
இனிய நினைவாய் நிலைத்த நட்பு

நட்பு ***எண்ணிக்கையின் பெருக்கமல்ல***
எண்ணங்களின் பரிணாமம்,புரிந்துணர்வின் பேரின்பம்.

பாசமாய் மச்சான் என அழைக்கும் ஜோய்-நேசமாய் ரவி
என அழைக்கும் அன்டன், Pax என விளிக்கும் அன்னதாஸ்
டேய் என்னடா செய்கிறாய்-ஜெகன், ஐயா என அழைக்கும் கிறிஸ்டி
ரவி என கூவி மகிழும் செயஸ்தியான், ஹலோ ரவி என்னும் சுவி

நட்பின் மற்றோர் பரிமாணத்தில், அறிவுப் பசிக்கு உணவாய்
அறுசுவையிலும் இனிதான அரிய நண்பர்களாய் ஆசான்களாய்
அருட் தந்தையர் மிலர், போல் சற்குணநாயகம், இராஜேந்திரம் ,
றெக்ஸ் ஜோசப் நன்னூல் வழியாய் குருவாய் ஞானம் பெற்ற குரு ஓஷோ

ஒரு மகனாய் பாசமோடு நடத்திய தம்பதிகளாய்
ரிச்சர்ட் பெர்னான்டஸ்-றெக்ஸ் ராணி . ஜஸ்டின் இராஜேந்திரம்
தன் குழந்தையாய் கண்ட வண பிதா ஹரல்ட ஜே வெபர்
அன்புகாட்டிய டெல்மாமோ, ஹேபியர், லோரியோ

அன்போடு பெயர் மாற்றி *Pax* என அழைத்த ஆசான்
சவரி ராஜா மாஸ்டர்

நண்பானாய் என் கவிதைகளுக்கு தோள் தந்தாய்
என் இரசிகனாய் என்னை ஊக்குவித்தாய்-இரசிகனின்றி
கவிஞனில்லை-இரசனையின்றிக் கலைகளுமில்லை

நட்பும் கலையே நண்பா, விழுந்து எழுவதால் நாம் வளர்கின்றோம்
பள்ளிப்பருவ நட்பு ***உதறுகாய் போல் ஒட்டிக கிடந்தது***
காலம் செல்லப், பழகிக் களித்து பாசம் கனிய ***ஓடும் புளியம்பழமாய்***
கருத்துகளுக்கு மதிப்பளித்து மெல்லத் துறவு பூணுகின்றது.?

என்றும் உங்களை புண்படுத்தும் எண்ணம் எனக்கில்லை-
காலம் போகின்றது, இனி காண்போமா என்பது கேள்வியானது
தேடல் என்று ஏதும் எனக்கில்லை, எல்லாம் எனக்குள்ளே
அனுபூதியில் உணர்வதே வாழ்வின் இரகசியம்.

இரு வழிப்பதை வாழ்வு-ஜனனம், மரணம்
ஒரு கதவின் இரு பக்கங்கள்
வாழ்வு அழிவதில்லை-மரணவாசல் வழியே
தொடரும் நிகழ்வு

இறை தந்த அன்புக் கொடையே நட்பு
காலில் முள் தைத்தால் பிடுங்கி விடலாம்
கருத்தில் முள் தைத்தால் புரிந்து கொள்ளலாம்
நட்பை துறந்து விடலாமோ?

உன் நட்போ என்றும் அரிதிலும் அரிதானது.
அன்பைப்போல் உயர்ந்தது ஏதுமில்லை
இறைவனோ தூய அன்பு நிலை
தாயே நாம் காணும் அன்பின் பெருநிலை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-8-2023

நட்பின் பெருமை

பட்ட மரம் துளிர்க்காது, சுட்ட மண் ஒட்டாது
வெந்த வித்து முளைக்காது-கற்பில்லா
நட்பும் காலமெல்லாம் நிலைக்காது.



மூப்பு, பிணி, சாவில்லாத நட்பிற்கும் கற்புண்டு ,
பிடி அவலும் நட்பால் அருஞ்சுவையானது
குசேலனை வருத்திய வறுமைமை-கண்ணன்
நட்பால் நொடியில் குணமானது

தேரோட்டி மகனும் முடி சூடி நாடாள
சரியாசனம் தந்தது-துரியோதனன் நட்பு
தன்னுயிரையும் ஈந்து மகிழ்ந்தது
மாவீரன் கர்ணனின் நட்பு

நட்பிலோ உயர்வு தாழ்வு இல்லை
ஸ்ரீராமனும், குகனும் குலாவி மகிழத் தடையில்லை
மன்னனும், புலவனும் கொண்ட நட்பிற்கு-மாண்பாய்
கோப்பெருஞ்சோழன்-பிசிராந்தையர்

மரணமும் நட்பைப் பிரிக்குமோ என்றோ,
மன்னன் மடிந்தது கேட்டு- பிசிராதந்தைப் புலவரும்
வடக்கிருந்து உயிர் நீத்து காலனைப் பரிகாசித்தார்
நட்பை கற்பாய்க் காத்தார்

பாரியும், கபிலரும் பூண்ட நட்பு-மக்கள்
அங்கவை, சங்கவையை வாழவைக்க
ஔவையும் , அதியமானும் கொண்ட நட்பு
அரிய நெல்லிக்கனியை ஈந்து ஔவையைக் காக்க
நட்பினும் உயரியது பூவலகில் ஏது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-10-2023

நட்பும் கற்பே

உலகில் தலைசிறந்த நண்பன் நீ என்றே
எனக்கு விருது வழங்கிக் கௌரவித்தாய்
நட்பையும் கற்பாய் காத்திட வரம் தந்தாய்-

நல்லரத்தினமே, நல்லதம்பியின் செல்வப் புதல்வனே
நன்றி சொல்ல வார்த்தைகள் இல்லை
நன்றி சொல்லி நட்பைக் குறைக்க
உள்ளமும் இடம் தரவில்லை

நா குளறி, மெய் சிலிர்த்து ஆனந்த கண்ணீர் சிந்தும்
நெஞ்சம், உனக்காய் வேண்டும் போதெல்லாம்
இறைவனை நன்றியோடு போற்றித் துள்ளும்
நண்பன் என் உள்ளம்

இறை தந்த கொடையே-நட்பு
நண்பர்கள் காத்திடும் அழகிய கற்பு
நட்பே நம் பெரும் சொத்து-ஆழ்கடலில்
மூழ்கிக் கண்டெடுத்த அபூர்வக் கொற்கை முத்து

தமிழோடு கலந்த இனிமையாய்
வண்ணமலரோடு கலந்த வாசமாய்
குருதியில் கலந்த சிவப்பாய்
உயிர் மெய் இணைந்த உறவாய்
இறைவன் தந்த உறவாய் நம் நட்பு
உயிருள்ளவரை வாழும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-1-6.2023

நட்பு



உண்மை நட்பில் பிரிவில்லை, பிரிவதும் உயர் நட்பில்லை
எண்ணில் பூச்சிமாய், இசையில் மௌனமாய்
ஆணவம் மறைந்து நிற்கும் அன்பே, உயர் நட்பு

குசேலனும் கண்ணணும், கர்ணனும் மன்னனும் கொண்டதும்
உயர் நட்பு, ஒருவரை ஒருவர் காணாது, கோப்பெருஞ்சோழனும்,
பிசிராந்தை அடிகளும் கொண்டதும் காவிய நட்பு
மடிந்த மன்னனுக்காய் புலவரும் வடக்கிருந்து உயிர் நீத்திட
வாழ்வு சாவு கடந்து வாழும் தெய்விக உறவாய் அன்பு

கம்பனும், சோழனும் கொண்ட. நட்பும்
கலைந்த கனவானது
ஔவையும், அதியமானும் கொண்ட நட்பு
வாழும் கொடையானது.

குசேலனிடம் கண்ணன் காட்டிய நட்பு,
பிடி அவலிலும் இனிது, மனைவியை சேடியாக்கி
மன்னவன் புரிந்த தொண்டும் பெரிது.

நட்பிட்காய் சாதியம் கடந்த, மன்னவனாய்
துரியோதனன், நட்பிட்காய் உயிர் கொடுத்த
நண்பனாய் கர்ணன்

கோல், குடை, படை கொண்டு அரியணை அமர்ந்தாலும்
நட்பின்றி வாடிய மன்னன் தருமன்- பெருவள்ளலிற்கு
அரிய நண்பனாய், அன்பினால் இன்புற்ற மன்னன்
துரியோதனன், நட்பிலும் கற்புண்டு காவியச் சிறப்புண்டு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra

உறவும் பிரிவும்-நவாஸ்

வாழ்வு முடிவற்றது-அன்பு அழிவற்றது
நிலையான அன்பிற்கு பிரிவில்லை
மரணத்திற்கு அன்பைப் பிரிக்கவும்,
அழிக்கவும் ஆற்றல் இல்லை



உடல்கள் மடிந்தாலும்-இதயத்தில் பூத்த
உணர்வுகள் மடிவதில்லை
உடன் பிறப்பைபோல் இனிய
உறவு ஏதுமில்லை


வறுமையோ, வளமையோ இளமையில்
ஒரு கூட்டில் வாழ்ந்ததுபோல்
வாழ்வில் இன்பம் என்றும் இல்லை
ஆற்றுவதற்கு வார்த்தைகள் இல்லை
தேற்றுவதற்குத் தாயும் இல்லை

உன்னைத் தேற்ற என்னிடம் ஏதுமில்லை
காலம் காயத்தை ஆற்றும், கடவுளே நம் துணை
அவன் தந்தான், அவன் எடுத்தான்
எல்லாம் அவன் செயலே-இன்ஷா அல்லா.
போற்றுவது நம் கடனே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-06-2023

பாடம் படிப்பு–ஆட்டம் பாட்டம்

பிரம்மத்தை தொழுது–பிரம்மசாரிகளாவோம்
மாயப் பெண்களை தொழுது சம்சாரிகளாகோம்





விருது வாக்காக "பிரம்மசாரிகள் சங்கம்" அமைத்து-
கன்னியர் கடைக்கண் பார்வை தவிர்த்த
கல்லூரி வாழ்வோ அழகிய யாகம்

கல்வியை வேள்வியாக்கி எம்மை ஆகுதியாக்கி
அறிவுச் சுடர் தகிக்க-அறிந்ததெல்லாம்-அறிஞர்
ஆய்ந்து அறிந்து கண்ட முடிவென்று அறிந்து
அறியாத உண்மையைத் தேடிய யாத்திரை

கற்றதை கசடறக் கற்று, கலந்துரையாடி, அறிவைஆழப்படுத்தி
பெற்றோரும், ஆசிரியர்களும் நண்பர்களும் மனம் மகிழ
மூன்றான்று கல்லூரி வாழ்வும் முடிவுக்கு வந்தது
மனம் கலங்கிப் பிரிந்திட எல்லாம் கனவானது

பாடிக்களித்த பறவைகள் திசைமாறிட-நெஞ்சில்
பசுமரத்தாணியாய் இனிய நினைவுகள் நிலைத்திட
போராட்டமான வாழ்வில் புதிய திருப்பங்கள்
நட்பின் பாதையில் நாளும் பூக்கும் வாச மலர்களாய்
வாரம் தோறும் நட்பை பகிர்ந்த மடல்கள்.



"A crowded room is an empty place without You."
"Love is the enchanted dawn of every heart"
கடித உறையில் எழுதிய வசனம் கண்டு
காண்பவர் வியக்க வளர்ந்த கடிதக் கலை.

நாடு கடந்து புலம் பெயர்ந்தபோதும்
நலம் கொண்டு நாளும் வளர்ந்த நட்புக்கலை
நல்லான் வரைந்தனுப்பும் ஓவியம்
நான் எழுதும் பிள்ளைக் காவியம்.

பல்லாண்டு நட்பூ, பழமுதிர்ச் சோலையாய் வளர்ந்திட
நல்லானின் நட்பூ நாளும் நான் சூடும் மலராய் பூத்திட
நாடு கடந்த வாழ்விலும் நாளும் பூத்துக்குலுங்கும் நம் நட்பு

வாழ்வின் நிலைகள் மாறியும் தேனின், தெள்ளமுதின்
மாறச் சுவையாய் மல்லிகை, முல்லையின் மாறாச் சுகந்தமாய்
குழலின் இன்னிசையாய்-நண்பா இன்றும் நிலைக்கும் நம் நட்பூ

அறிவுத்தாகம் இன்றும் வற்றவில்லை
அறியும் முயற்சியும் ஓயவில்லை- ஞானத்தேடலான
வாழ்வில், நாளும் கற்பதும், அறிவதும்
மெய்யறிவாக என்னே பேரின்பம்.



செல்லமாய் அழைத்து புன்னகையோடு
கற்பித்த " செல்லையா டீச்சர்"
எப்போதும் "*Pax*" பக்கம் நான் என
சொல்லி அன்பு காட்டிய அன்னை.

விலங்கியலே வனப்புற-மனம் களிப்பற
கற்றது காவியமாக, வரைந்ததும் ஓவியமாக
கலைப்படைப்பாய் புரிந்த -தவளை, எலி,
சுறா, மண்புழு என வெட்டுப் பரிசோதனைகள்

பேரழகோடும் பெரும் கடமையுணர்வோடும்
நேசமாய் விலங்கியல் கற்பித்த உமா டீச்சர்

என்ன கிளி என்றே பாசமாய் அழைக்கும் அரியரெத்தினம் மாஸ்டர்
நட்போடும், நகைச்சுவையோடும் உறவாடிய கொன்ஸாக மாஸ்டர்
அழகிய கையெழுத்தும் கலை உணர்வும் கூடிய
இரத்தினமாய் "குணரெத்தினம்" மாஸ்டர்

எண்ணிப் பார்க்க இதயம் நிறைகின்றது
வாழ்வு கழிகின்றது-மனம் வாழ்க வாழ்க என்றே-
அறிவுத்தாகம் தீர்த்த ஆசான்களைப் புகழ்கின்றது.
எல்லாப் புகழும் இறைவனுக்கென்றே
இதயம் வணங்கிட மேனி சிலிர்க்கின்றது.



பூவிழிப் பாவையர் பூவை மொய்க்கும் தேன் வண்டாய்
எம்மை மொய்த்தபோதும்-வேல்விழி தவிர்த்து
கல்வியை வேள்வியாக்கி கற்ற காலம்

கனாக் காணும் காலத்தின்-இனிய கனவாக-
நட்பே உயர்வாக- ஆசான்களே தெய்வமாக
வாழ்வின் மறக்கமுடியாத பொற்காலம்.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
வாழ்ந்தறிந்த உண்மையாக
என் சித்தமன்று, இறைவா நின் சித்தம் நிறைவேறுக
சரணாகதியில் நன்றி சொல்லித் துதிக்கும் இதயம்.

அன்னதாஸ், நல்லரெத்தினம், நவநீதன், நவாஸ்,
சாந்தராஜ். கொலின் ,ஜெகன்
மனோ, நிலாந்தி, கலா, சுந்தரேஸ்வரி, சுகந்தி,
தமிழ்ச்செல்வி, இளங்கோதை, சுகுணா,
கிருபராணி, சுகிர்தாம்பிகை
மறக்க முடியாத நட்பு-நினைக்க
நெஞ்சை இன்றும் இனிக்கவைக்கும் அன்பு





அறுசுவை தாண்டிய பெருஞ்சுவையாய்
ஏழ்சுரமும் கடந்த இன்னிசையாய்
ஆறறிவு கடந்த பேரறிவாய் எம் நட்பு

காலம் மாறிடப், புலம்பெயர்ந்த நட்போடு உரையாட
“வாட்ஸ்அப்” துணையாக-தாயகம் வரும்போதெல்லாம்-
பிரியாத நட்பின் முகம் பார்த்து, ஆயிரம் கதை பேசி-
கவிதை மொழிபேசி சுவைத்து இன்புறும் காவியமாய் எம் நட்பு.

இடம் மாறியும், சுவை மாறாத மலைத்தேனாய்
நிலைமாறியும்-திசை மாறாத காந்த ஊசியாய்
மணம் மாறா வாசமலராய்-மனதில் பாசமலராய்
பயிலுந்தோறும் இனிக்கும் நன்னூலாய் நல்லபெருமான் நட்பு
அலையிழக்காத நீலக்கடலாய் ஐயா உன் பேரன்பு



கற்று ஓயாது, காதலாகி கல்விக் கடலில் மூழ்கி
அறத்துப்பால் அருந்தி களிக்கும்
சங்கத் தலைவன் மட்டும் இன்றும்-பிரம்மச்சாரி ?

அறத்துப்பால் , பொருட்பால் கடந்து,
காமத்துப்பாலில் மூழ்கித் திளைக்கும்
ஏனைய அங்கத்தினர்களோ சம்சாரி


மனைவி அமைவதெல்லாம் இறைவன்
கொடுத்த வரம்?
தாயே தெய்வமாக நான் பெற்ற வரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-02-06-2023

உயிரில் கலந்த உறவு

(Rex Marian Pious Joseph- A true Human)

இன்று என் இதயமெங்கும் சோக எரிமலையின் கண்விழிப்பு
என் சுவாசத்திலோ கொடும் புயலின் படையெடுப்பு
என்னை பிரிந்து போனதோ-என் உயிரில் கலந்த இனியநட்பு
என் ஆனந்த தேன்சுனையிலோ துயரக் கசப்பின் கைகலப்பு





முக்கனியாய் இனிப்பது உன் நட்பு-அப்பா
முத்தமிழாய் நான் சுவைத்தது உன் உறவு
முப்பாலாய் விரிந்தது உன் அறிவு-விசும்பின்
அப்பாலும் செல்வது உன் அன்பு

நீர் தேடும் கலைமானாய் அன்பைத்தேடி
அலைந்தபோது-நீயோ நீரோடையாய் நின்றாய்-
அறிவு தேடும் மாணாக்கனாய் திரிந்தபோது-நீயோ
நூல் நிலையமாய் உன்னையே தந்தாய்

குருவாய்-சகோதரனாய்-இனிய நண்பனாய்
என்னை அன்பு சூர்ந்த இன்ப உறவே,
உனைப் பிரிந்தபின் -என் உலகோ வெறுமையானது
இடிதாங்கி இல்லாத சின்ன இதயத்திற்கு-
உன் இழப்போ பேரிடியானது.

உன் பிரிவால், என் விழியிரண்டில் கண்ணீர்ப்பூக்களின்
வாடாத கண்காட்சி-என் இதய வீணையில்
முகாரி ராகத்தின் ஓயாத அரசாட்சி

உன்னோடு நான் வாழ்ந்தபோது
உவகைப் பூவனத்தில் என் குடியிருப்பு,
உன்னைப் பிரிந்தபின் -என நெஞ்சில்
துயரச் சாக்கடலின் படையெடுப்பு

என் அறிவுப்பசி தணித்திட நள்ளிரவிலும் எரிந்த
ஞானவிளக்கு நீ , என் அன்புப்பசி ஆற்றிட-
என்னையும் உன் பிள்ளையாய் ஏற்ற
அப்பனும் நீ

காலமெல்லாம் முக்கனியாய் இனித்தே-நட்பிற்குப்
புது இலக்கணம் வகுத்தவர்-ஏற்ற பணியெல்லாம்
இறைதொண்டாய் ஆற்றி மகிழ்ந்தவர் என் நண்பர்

இறுதிவரை மெழுகுவர்த்தியாய் தன்னை எரித்து ஒளிர்ந்தவர்
-என்றும் இறைவன் திருவடியை தன் இதயத்தில்
தொழுது மகிழ்ந்தவர், என் அன்பர்- எங்கே என் இறைவா?

சோகப் பண்ணிசைக்கும் ஒற்றைக் குயிலாய்
உன்னைத் தேடியே என் மனம் கரையிது
கண்ணீர்ப் பூத்தொடுக்கும் என் ஈரவிழிகளும்
ஐயா மீண்டும் உன்னைக் காணவே ஏங்குது.

கானப் பண்ணிசைபோல் உன் ஸ்நேகம்
ஞானத் தேடலாய் உன் வாழ்வுப் பயணம்
வான் வெளிபோல் உன் இதயம், என்றும் எல்லோரும்
நலம் வாழ வாழ்திடும் நீயோ ஒரு சூரிய உதயம்.

என்னை பிரிந்து வானகம் நீ போனாலும்
விண்ணேகி என் ஆவி உன்னோடு சேரும்வரை
மண்வாழும் நாளெல்லாம் என் மனம்
இனியவனே, உனை ஒருபோதும் மறவாது.

உத்தமனே என் உயிர்ப்பூவில் தேனினுமினிய நட்பாய்
நிறைந்தவனே, முத்தமிழும் மூப்புற்று தன் இனிமை இழந்தாலும்
முப்பாலும் திரிந்து பொருளிழந்து பொய்த்தாலும்
சித்தம் நினைப்பு செய்கை உள்ளவரை-என்
உள்ளம் ஒருபோதும் உனை மறவாது.

இது ஒரு மகத்தான மனிதருக்கு என் சிறிய அஞ்சலி
அவரோடு வாழ்ந்த காலம் அழகிய பொற்காலம்
எந்த மத அடையாளங்களுமற்ற ஒரு மனித நேயமிக்க
மாமனிதன் என் அன்பர்
அன்புமிக்க அந்த மனிதர் மேல் அன்றும்
இன்றும்- என் மனம் வாஞ்சையாயிருக்கின்றது.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-10-2023

செபஸ்தியான்

செபமும், தியானமும் கலந்த
அரிய உறவாய் அன்பு நண்பன்
செப-ஸ்-தியான்



நிலமாறினும் சுவை குன்றாத மலைத்தேன்
இடம்மாறினும், திசைமாறாத காந்தப்புலம்
பயிலுந்தோறும் இனிக்கும் நன்னூல்
நினைக்க இனிக்கும் நட்போ இன்பத்தேன்



சுவைக்க இனிக்கும் முக்கனி
மணக்க மணக்கும் மல்லிகை-ஒளிரும் கதிரவனாய்
அலை ஓயாக் கடலாய்-அவன் நட்பூ

பல்லாண்டு போனபின்பும் பழம் மதுவாய் போதை தரும் அன்பு
பொன்னை விரும்பும் பூமியில் என்னை விரும்பிட்ட பேரன்பு
இறை தந்த கொடையாய்-இன்றும் நிலைத்த நட்பு



தெருவிளக்கில் நள்ளிரவு வரை நாம் விளையாடி மகிழ்ந்த சதுரங்கம்,
ஓட்டைத் தோணியில் ஒன்றாய் வாவியில் பயணித்த பேரின்பம்
அஞ்சிடக் கவிழ்ந்த தோணியில்-என்னை அஞ்சாமல் காத்து
கரை சேர்த்துச் சிரித்த நட்பில்தான் எத்தனை ஆனந்தம்.

எண்ணும்போதும், எழுதும்போதும், கலந்துரையாடும்போதும்
கண்ணில் தோன்றும் அவன் உருவம்-கண்களில் கசியும்
ஆனந்த கண்ணீரின் பேரின்பம்





புனித சவேரியார் சங்கத்தில்-எம்மிடையே
கலகத்தை தூண்டிவிட எண்ணியவர்களுக்கு
இனிக்கும் மலைத்தேனாய் மாறிட்ட நட்பு
எனக்கோ கற்பதருவான அன்புறவு

கேட்டால் கொடுக்கும் கற்பகதரு
கேட்காமலே அருளும் வள்ளலாய்
நட்பின் கொடையுள்ளம் அவனுள்ளம்

ரவி என அழைக்கும்போது செவிகளில் பாயும் தேனருவி
நெஞ்சுக்குள் பாடும் பூங்குருவி-நட்போ இசையருவி
வருடம் பல கடந்தும் வற்றாத நட்பின் புதுவசந்தம்
வான் ஒளிரும் நட்சத்திரமாய் என் நெஞ்சில் அவன் பந்தம்.





அரசியல்-ஆன்மீகம், கவிதை, இலக்கியம் என
ஆயிரம் கதைபேசிட அவன் அறிவும் பெருவிருந்து
உண்மைக்கு மதிப்பளித்து, உயர் நட்பை காக்கும்
அன்போ நெஞ்சுக்கு அரு மருந்து

வாழ்வைத் தேடலாக்கி-நட்பைக்
கற்பாய் காத்த இனியவனே, உன் மனைவியும்
என் தங்கையாக-மாறாத அன்போடு
என்னை நேசிக்க இறை தந்த பெருவரம் நீ

வான் நிலா ஒளியிழந்தாலும், வண்ண மலர்கள் நிறமிழந்தாலும்
வந்தலையும் அலைகள் ஓய்ந்தாலும், வற்றாத கங்கையாய்,
வளரும் இமயமாய் நிலைக்கும் உன் அன்பை-
உயிர் உள்ளவரை என் நெஞ்சம் ஒருபோதும் மறவாது.



புரியாத தவத்திற்கு இறை தந்த அரிய வரம்
பொய் உறவுகள் மலிந்த உலகில்
உன் நட்போ விலைமதிப்பில்லாத வைரம்



பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல்
நின்னை மறவாமை வேண்டும்

இதயம் கலந்த இனிய உறவு
எந்நாளும் நலமோடு பல்லாண்டு வாழ
எனது இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-06.2023

நண்பன் பெருமை



கற்றோர் சபையில் நின் பெருமை கண்டு, தந்தையும் வானில் மகிழ
ஈன்ற பொழுதிலும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டு
பெற்ற வயிறு பூரிக்க, பெருமான் வள்ளுவன்
சொன்ன குறளுக்கு வாழ்வை அர்த்தமாக்கிய நண்பன்

பெற்றவருக்கு பெருமை சேர்த்த நின்புகழ் கண்டு
மலரோடு சேர்ந்த நாராய்-நண்பன் மனமும்
பூரித்து மணக்க, என்னே! உன் அருமை பெருமை



"மாமருத்துவன் இறைவன்" உன்னையும்
காக்கும் கடவுளாய் உருமாற்றி, தன் பணி செய்யப்
பணித்தான், உயிர் காக்கும் அரும்பணியை
கொடையாக்கி, இறை மகன் நீ என மகிழ்ந்தான்



மட்டுநகர் மருத்துவர் கழகம்-உனக்களித்த பெருமை
நாம் கற்ற கல்லூரிக்கும் அழியாத மகிமை
இறைவன் தந்த வரமிது-ஐயா
ஏழ் ஏழ் பிறவியிலும் நீ செய்த தவமிது



கைத்தலம் பற்றியவள் அருகிருக்க
காதலும் வற்றாத நதியாய் பெருக்கெடுக்க
இருவரைக் கண்டு ஆனந்த கண்ணீர் துமிக்க
இறைவனைத் துதிக்கும் என் மனம்



வையகத்துள் வாழ்வாங்கு வாழ்தல் அரிது
வாழ்பவருள் ஒருவராய் நண்பனைக் கண்டு மகிழ்தல்
அமுதிலும் தேனிலும் இனிது- ஆசான் குணமகன்
குணமும் உன்னைப் புகழ்ந்தேற்ற உன் புகழ் பெரிது

என்றும் உன் புகழ் ஓங்க, எல்லோரும் இனிதாய் வாழ,
வற்றாத நதியாய், பொய்க்காத வான் கொடையாய்
நின் பணி சிறக்க மனம் கனிந்த வாழ்த்தும் நண்பன்





எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra 19.3.2022

ஸ்நேகிதனே என் ஸ்நேகிதனே



கண்டதும் விழிகளில் ஆனந்தம் பொங்கும்-ஆயிரம்
புன்னைகைப் பூக்கள் இதயத்தில் ஒன்றாய் மலரும்
நிலா கண்ட கடல்போல் நெஞ்சம் பொங்கிட- திருவிழா
என்றே மனம் தோகை மயிலாய்க் களிநடனம் புரியும்.

கதைகள் பலபேசி நெஞ்சம் களிப்புற
நட்பைச் சுவாசித்து இதயம் குதூகலித்திட
அலைபேசியில் கவிதை சொல்லிக்-கவிஞனாய்,
இரசிகனாய் உருமாறிடக் களைகட்டும் கவியரங்கு

எத்தனை ஆண்டுகள் எம் நட்பு-பள்ளியில் தொடங்கி
பருவங்கள் பல கடந்து-முதுமையின் முதற்படியில் நின்றபோதும்
நெஞ்சில் குன்றாத பசுமை மாறாத இளமை.

மலரும் நினைவுகள் தென்றலாய் நெஞ்சைத் தழுவிட
துவண்டபோது தோள்கொடுக்க விழுதாய் நின்ற உறவு
விழிகளில் கண்ணீர் புஷ்பங்களை உதிர்த்திட
உன்னால் மலரும் என் ஆனந்த மனது

கதைபேசி களித்ததுவும்-படிப்போடு-பள்ளியில் கதைகள் பலபேசி
மகிழ்ந்ததுவும் கல்லில் எழுத்தாய் நெஞ்சில் நிலைத்திட
-வருடங்கள் பல போனபின்பும் விண்மீனாய்
ஒளிரும் நட்பு,பாடும்மீனாய் இசைமீட்கும் நம் உறவு.

அமுதிலும் தேனிலும் இனியது நம் உறவு
இமயத்திலும் உயர்ந்தது
ஏழ்கடலிலும் பெரியது -நம் நட்பு

கருத்து முரண்பட்டபோதும்-நட்பால் மாற்றுக் கருத்துக்குகளுக்கு
மதிப்பளித்தோம் ஒன்றாய் கூடி உண்மையைத் தேடி
ஒருமனதாய் முரண்பாடுகளை களைந்தே
நட்பைப் கற்பாய்க் காத்து வளர்த்தோம்.

கடவுளை தேடிடும் பாதையில்-நம்முள்ளே நாம் கடந்து,
மலரும் வேளையில் நாமுற்ற இன்பம் நண்பா
மகரிஷிகள் பெற்ற பேரின்பம்
என்னை கவிஞனாக்கிய என் கலாரசிகன் நீ
நம் நட்பை கற்போடு மதிக்கும் உயர்ந்த நண்பன் நீ

ஆரவாரமான மாய உலகில் அன்பும் உண்மையும்
நம்மை ஒன்றாய்ப் பிணைத்திட- நம் தேடலில்
ஒருவரை ஒருவர் பிரியாத உறவாய் கண்டு மகிழ்ந்தோம்-
வானமுதாய் நட்பை உண்டு சுவைத்தோம்.
நன்நூலாய் படித்துக் களித்தோம்.

என் கவிதைக்கு முதல் இரசிகனே
கவிபாட என்னைத் தூண்டிய ஆருயிர் நண்பனே
உன் பாராட்டே நான் பெற்ற பெரும் பரிசு
என் மனதோ காதலாகித் துடிக்கும் கன்னி மனசு

நட்புறவே, இது இறை தந்த வரம்-முற்பிறப்பில்
நாம் செய்த தவம்
ஏழ் ஏழ் பிறப்பிற்கும் தொடரும் நட்பிது
ஏழ்மையும், செல்வமும் பிரிக்காத உறவிது

நீ அடியெடுக்க, நான் கவி படைக்க, படைத்தவை
பல்சுவையாய் இனிக்க, இதயமும் உணர்வும் ஒன்றாய்க் கலந்திட
கவிதையாய், கானமாய், ஓவியமாய் நம் உரையாடல்கள்-
மீட்டிப் பார்கையில் இன்றும் இதயத்தில்
ஆயிரம் மலரும் இன்பநினைவுகள்

தனிமையும், தோல்விகளும் நெஞ்சை வருத்திய போதெல்லாம்
உன் நட்பெனும் அமுதோ அருமருந்தாய் சஞ்சீவினியாய்
என்னைக் குணமாக்கிட்ட அதிசயங்கள்.

பார்த்து சுவைத்து பழகி மலர்ந்த நட்பு-பொன்னில்
வார்த்த பூவாய் நெஞ்சில் நிலைத்திட
நல்ல இரத்தினமாய் நான் சூடி மகிழ்ந்திட
என் இதயம் சூடிய அரியரத்தினம் நீ

ஏழ்கடல் பிரித்தாலும், எட்டாத்தொலைவில் இருந்தாலும்
வற்றாத கங்கையாய், திகட்டாத தேனாய் இனிக்கும்
உன் உறவை என் நெஞ்சம் ஐயா ஒருபோதும் மறவாது.

கம்பனல்ல கவிபாட-குலோதுங்க சோழனே,
புலவன் பிசிராந்தையுமல்ல வடக்கிருந்து நட்பின்
அருஞ்சுவை சொல்ல- கோப்பெருஞ்சிங்கனே
அங்கதேசத்து மன்னன் கர்ணனுமல்ல.
வள்ளலாய் உயிரை வழங்கிட

நட்பின் பெருமை சொன்ன
மாமனிதர் முன்னால்-நண்பன் என்று
என்னைச் சொன்ன உன் பெருமை
என்னே என் நண்பா?

என் கவிதை சொன்ன நட்பிது
நெஞ்சு நூற்ற பூக்களால்-
நான் சூடிக்கொடுக்கும் கவிதையிது
சூடி மகிழ்வாய் என் மன்னவா.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-05-23

ஸ்நேகிதி



என் பிரிய ஸ்நேகிதிக்கு-உங்கள் அறிவும் இரசனையும்
என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்த-என்னை
உங்களில் கண்ட ஆனந்தம் பேரின்பத்தைக் கூட்ட
கலைஞனும், இரசிகையுமாய் கண்ட நட்பை மனம் பாராட்ட
காவியமாய் வந்த உறவு நீங்கள்.

என் கவித்துவம் வளர கற்பனை சிறக்க
தாயே அருள்வாய் விமர்சனம்

கல்விக்குத் தடையின்றி
மாதம் ஒரு முறை நான் அனுப்பும் கவிதைக்கு-
காலம் கிடைக்கும்போது ருசித்துக் களித்த
இரசனையை சொல்லுங்கள்.

காவியமாய் மடல் எழுத கம்பனல்ல
ஓவியமாய் எழுதிச் சொல்ல இரவிவர்மனல்ல
எழுதிக் களிக்கும் சித்தனுமல்ல
கிறுக்கிப் பார்க்கும் சிறு குழந்தை நான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-06.2023

குயில் தோப்பு-சுபா

பாடிக்களித்து பலகதை பேசிக் களித்த ''பள்ளிக் குயில்களில்'' -ஒன்று
விடை சொல்லாமல் பறந்திட, விம்மிக் கரைந்த உள்ளம்
செய் பிழை அறியாது நெஞ்சம் உருகி-நேசத்தால் கருகி வருந்த
விடியாத பொழுதுகளாய் நாட்கள், கண்ணீரில் நிலைத்த விழிகள்

வாட்ஸ் அப்பில் கூவி அழைக்க வந்து
கதைபேசிக் களித்த குயில்
வருவேன் என்று சொல்லி மகிழ
கூடிவந்து கூட்டத்தில் ஆடிப் பாடி மகிழ
ஆனந்தமாய் மலரும் புத்தாண்டு

அன்பை விட ஏதுமில்லை அந்தஸ்தோ, அறிவோ,
பொன்னோ, பொருளோ என்னிடமில்லை
எல்லோரும் நலம் வாழ, வாழ்த்தும் உள்ளம்
அன்பை பகிர்ந்து உறவை வளர்க்கும் நட்பாய் இதயம்.

நட்பும் பூ -பூக்க நல்வரவாய் வந்த உறவு
பாசமலராய் நேசம் சொன்ன நட்பூ
மஞ்சளும், குங்குமமும், மலர்ச்சரமும்
வாடாது நிலைக்க வாழ்த்தும் நட்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-06.2023

சுபத்திரா அம்மை

பத்தாம் ஆண்டு மாணவருக்கு-**இரசாயனவியல்**
படிப்பிக்க வந்த இளமங்கை, பொட்டு வைத்த வட்ட
முகமோ பௌர்ணமி நிலவு, மாணவர்களை கட்டிப்போட்ட
அன்பினிலோ பொங்கிடும் தாய்மையின் உணர்வு



பதினோராம் ஆண்டில்-ஸ்நேகிதியாய், தாயாய்
மாறிய உறவு, ஒரு வலுவளவு, இருவலுவளவு
பங்கீட்டு வலுவளவு தாண்டிய பாசப்பிணைப்பு

பொது இரசாயனம், பௌதிக இரசாயனம், சேதன இரசாயனம்
என கற்கை நெறிகளை கவிதையாய் பாடிய ஔவை
கற்றலுக்கு வாழ்வை அர்ப்பணமாக்கிய பெண்மை
காவிய காலத்து சரஸ்வதி என்பதே உண்மை



ஆய்வு கூடமும் அறிவின் ஆனந்தக் கூடலாக
சேதன இரசானவியலில்-மனம் சங்கமிக்க, ஆண்டுகள் போக
சுவைகூடும் "**எதனோலிலும்**" இன்சுவையாக -எண்ணிட
நெஞ்சினிக்கும் அன்னையின் நினைவுகள்

சிரித்த முகம் " செல்லையா" டீச்சர் என்றே
இன்றும் அழைக்கும் பிள்ளை மனம்-உள்ளம்
எங்கும் உவகை வெள்ளம் பொங்க-என் சேதனத்தை
மாற்றிய தாயோ ***அன்பின் அதிசய இரசாயனம்***

ஊக்கியாக ஊக்கமளித்த அன்னை, உவகையூட்டும்
நைதரசொட்சாக பெண்மை, ***உறவுகளின்***
ஆவர்த்தன அட்டவணையில் உயரிடத்தில் தாயாக
இன்றும் என் நெஞ்சில் வாழும் அம்மை

உடலோடு கலந்த ***திண்மமாய்***, உள்ளோடும்
குருதியில் ***திரவமாய்*** சுவாசத்தில் வீசும் ***உயிர்காற்றாய்***
தாயே நீ காட்டிய பேரன்பு

பல வருடங்களுக்கு முன்-பாதையில் கண்டு
கட்டியணைத்து, அன்பைச் சொல்லிய தாய்மை
நான் எப்போதும் Pax இன் பக்கம் என்றே
என்னைத் தன் பிள்ளையாக்கி, செல்லம் தந்த அம்மை

அமிலமா?, காரமா? **பாசிச்சாயத்தாள் கடந்த**
அன்னையின் அன்போ-இன்றும்
அமுதின் சுவையாய் மனதில் இனிக்கும் நிலைப்பு

கல்வித் தீபத்தை என்னுள் ஏற்றி வைத்த தெய்வங்கள்
நான் நூற்காத தவத்திற்கும் கேட்காத வரத்திற்கும்
இறைவன் ஈந்த அரிய வைரங்கள்
என் ஆசிரிய பெருந்தகைகள்

காலம் போனாலும்-இதயம் மறவாத இனிய எண்ணங்கள்
பொட்டும், பூவும் சிரிக்க-மஞ்சளும், குங்குமும் நிலைக்க
பல்லாண்டு தாயே நீ வாழ்க என்றே
இதயராகமாய் வாழ்த்தும் உன் பிள்ளை நான் அம்மா



எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-24-08-2023

தாய்மை



ஒளியின் அழகை விழியறியும், ஓசையின் சுவையை செவியறியும்
நறுமணச் சுவையை மூக்கறியும், அறுசுவையை நாவறியும்
ஊறின் சுவையை உடல் அறியும், நன்நூலின் சுவையை அறிவறியும்
நட்பின் சுவையை -ஸ்நேகிதியே நட்பே அறியும்



அன்னையாய் தாயே நீ தந்த அமுதில்
அறுசுவை தாண்டிய அன்பைச் சுவைத்தேன்
ஆறாம் அறிவைக் கடந்த தாய்மையை இரசித்தேன்
ஆயிரம் இதழ் தாமரை நெஞ்சில் மலர
அன்பிறைவனைத் துதித்தே வேண்டுகின்றேன்

மஞ்சளும், குங்குமமும், மலர்ச்சரமும் நிலைக்க
கனி முகத்தில் புன்னகை வற்றாது, வளமோடும், சுகமோடும்
வாழ்நாள் எல்லாம் சௌபாக்கியவதியாய் பல்லாண்டு
பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகின்றேன்.





ஆனந்தக் கண்ணீர்ப் பூக்க-உன்
பிள்ளையாய்-பிரிய நண்பனாய்-தாயே
உன்னைப் போற்றித் துதிக்கின்றேன்

அன்னையாய் அமுது தந்தாய்
நட்பின் பெருமை அறிய என்னையும்-உன்
நண்பன் என்றே போற்றிப் புகழ்ந்தாய்.

பிரேமா எனும் பெயரிலும் பிரேமை ஒளிர
நட்பிலும் பிரேமை ஜொலிக்க
மங்கலநாயகியே- என் தாயே நீ வாழி!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-06.2023

அன்னையும் ஆசானுமான அன்புருவு-உமா டீச்சர்



பிள்ளை கணபதியோ-அன்னை உமையவள் பிள்ளை
உமையவளோ-இன்று கணபதிபிள்ளைக்கே
மகளான , அதிசயத்தின் எல்லை

விளங்கமுடியாத விலங்கியலும், இரசாயனவியலும்
வியந்து படிக்க-நாளும் பொழுதும் -மனம்
பாடங்களைக் காதலாகித் தியானிக்க
இன்பவியலாக பாடங்களை மாற்றிய அன்னை



பொன்னில் வடித்தானோ பிரம்மன், பூவையை வண்ணப்
பூக்களால் வடித்தானோ பார்த்து அழகை வியக்க,
பூங்கொடி அழகிய முறுவலோ அன்பைச் சிந்தும் தாய் மடி-

கருங்குவளை விழிகள்-வெண்முத்துப் பல்வரிசை
வியந்து பார்க்க அழகோவியம்
பழகிப் பார்க்க தாயோ, அன்பின் காவியம்

பொன்மேனி வாசம் மணக்க, பேசும் மொழியில்
பாசம் பொங்க, நேசமாய் சொல்லித் தந்த பாடம்
எண்ணிட இன்றும் ஏங்கிடும் மனம்

சின்னத் தவளையை பிடித்து வந்தேன் என ஸ்நேகிதிகள்
செல்லமாய்ச் சீண்ட எனக்காய் பரிந்துரைத்த தாய்
என் எழுத்தையும், வரை படங்களையும் பாராட்டிய அன்னை
ஓய்வின்றி ஒவ்வொரு சனியிலும் பாடம் சொல்லித்த தந்த அம்மை

மண்புழு, கரப்பான், தவளை. எலி, சுறாவின்
உடற்கூற்றை ஆய்வு செய்ய சொல்லித் தந்து
விலங்கியலும் விரும்பிப் படிக்க, கல்வியை
வேள்வியாய் யாக்க கற்றுத் தந்த தேவ அன்னை

வெவ்வேறாய் பிரித்து வைத்த தவளை, எலியின்-
எலும்புகளை கண்டு பிடித்தல் பரீட்சையாக
கற்பித்தலே கலையாக, கண்டு பிடித்து இன்புற்ற காலம்
இன்று கனவானது, பழங்கதையானது

உப்புக்களை கண்டு பிடிக்கும் பரிசோதனை உற்சாகத்தை
கூட்ட-கற்பித்தலால் கற்றலில் இன்புற்று, கானம் பாடி
வானம் பாடியாய் பறந்த பிள்ளை மனம் எண்ணிட ஏங்குது

பரீட்சையின்போது என்னைச் சுற்றி அழகு மாணவிகள் அமர்ந்திட
நடுவில் அமர்ந்த நானோ வெட்கத்தால் திண்டாட
"எழுந்து வாரும், இந்த இடம் உமக்கு ஏற்றதல்ல"
மனம் குளிர பரீட்சை எழுத நல்லிடம் தந்து உதவிய தாய்

என்னிலும் சிறந்த மாணவர் பலர் இருக்க, தன்
திருமணத்தின்போதும், தலைப் பிரசவத்தின்போதும்
தன் பாடங்களை நான் நடத்திட என்னைத் தெரிந்தவர்,
பல்லாண்டு போனபின் என்மேல் தாய் கொண்ட நம்பிக்கை
எத்தனை பெரிதென புரிந்தே மகிழ்ந்த பிள்ளை



வகுப்பில் ஒரு முறை நண்பர்கள் என்னை விரட்டிப்
பிடிக்க துரத்திவர, ஓடிச்சென்று டீச்சர் என்றே
அவர் சேலைத் தலைப்பை நான் பிடிக்க-தன்
பிள்ளையாய் என்னைப் பார்த்துச் சிரித்த அன்னை

இன்றோ தாய் மகனாய் உறவு வளர
அன்னை போனபின்-அன்னையாய்-என்னை
"மகனே" அழைக்கும் ஆனந்த அன்புறவு-

ஆண்டுகள் கடந்தும் அன்புறவு, ஆல்போல் தழைத்து
அருகு போல் வேரோடி, மூங்கில்போல் சூழ்ந்து முடிவில்லாது
வாழ்ந்திருக்க-தந்தையாய் அன்பை அள்ளிப் பொழியும்
அவர் கணவர், தாய் தந்தையரை வரமாய் தந்தே தன்
அன்பைச் சொல்லும்-இறை கருணைதான் என்னே!

கரைகாணாத கல்விக் கடலில் இன்றும் தொடரும்
என் பயணத்தில் காலத்தால் அழியாத ஆசான் உறவுகளில்
கற்பகதருவாய், காமதேனுவாய், கல்விச் செல்வத்தை
அள்ளித் தந்த அழகிய வள்ளல் அன்னை உமா
உறவுகளின் பரிணாமத்தில் அன்னைக்கு உயரிடம்
அன்பே என் வாழ்வின் குருபீடம்

என் கவிதைகளின் இரசிகை-என் காதல் கவிதைகள் கண்டு
வியக்கும் மங்கை தன் காதலை எனக்கு சொல்லிய ஸ்நேகிதி
கவிதையாய் அவர் காதலை நான் வடிக்க பாராட்டிய அம்பிகை
காலங்கள் போனாலும்,, கண்களில் மறையாத அழகுருவம்
கருத்தில் அன்னையாய், ஆசானாய் நெஞ்சம் பூஜிக்க-அம்மை
உமையவளாய் வீற்றிருக்கும் தாயோ தெய்வம்

எல்லாப்புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-10-10-2023

வள்ளல் என் நண்பன்

வள்ளல்களை இலக்கியத்தில் படித்தறிந்ததுண்டு
வள்ளலாய் வாழ்வில் கண்டதும், புலவனாய்
போற்றிப் பாடி மகிழ்வதும்
நன்பனே உன்னைத்தான் என் நண்பா





கொடுத்துச் சிவந்த உன் கரங்கள்-நாளும்
கொடையால் நிறைந்திட இறைவனை வேண்டி
இறை தந்த பெருங்கொடை நீ என்றே
உன்னைப் போற்றுகிறேன்

இறைவன் புரியும் பேரதிசயமாய்-ஏழை
என் வாழ்வில் உன் நட்பு
இயேசுவே என்னோடு உன் வடிவில்
நண்பனாய் உறவாடும் பேரன்பு

மயிலுக்குப் போர்வை கொடுத்தான் பேகன்
முல்லைக்கு தேரீந்தான் பாரி
இருப்பதற்கு நிழலாய் வீடு தந்த இம்மானுவேல்
இதயம் நிறைய ஆனந்தம் தரும் இனிய நண்பன் ஜோய்





உயிருள்ளவரை என் உள்ளம் உன்னை
ஒரு போதும் மறவாது, இறை கொடையே -நாளும் தந்தை
இறைவனுக்கும் நன்றி சொல்ல என் நெஞ்சம் மறவாது

நாளும் பொழுதும் நலமோடு வாழ-உன்
வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் நிறைய
நன்றியோடு இறைவனை-நாளும்
வேண்டும் என் இதயம்.

அரிய நட்பாய் பள்ளி வாழ்வில்
அன்பிறைவன் தந்த கொடையே-ஆருயிரே
முதுமை வந்தபோதும் மறவாத உன் அன்போ
என் நெஞ்சில் நிலைத்த அரிய முத்து

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-09-2023

வண்ணக்கிளி

என்ன கிளி என, என்னைச் செல்லமாய்அழைக்கும்-எந்தன்
வண்ணக்கிளி மௌனித்துப்போனது-செல்லக்கிளிகளுக்கு
பாடம் சொல்லித்தந்த கிள்ளை மொழி-இன்று
உயரப் பறந்து “வீடு” போனது



கட்டழகும், கம்பீரத் தோற்றமும் நெஞ்சில் நிறைய
பிரயோக கணிதமும், பௌதிகமும் மனதில் பதிய
பாடம் சொல்லித் தந்த ஆசான்



காலம் பல கடந்தும் காணும்போதெல்லாம்
என்ன கிளி என வாஞ்சையோடு அழைக்கும்
எந்தன் நேசம் மறைந்து போனதே
பிள்ளை மனமும் புண்ணாய் ஆனதே

எல்லாம் மாயை என்றான உலகில், வாழ்வும்
கலையும் கனவாக, பள்ளி வாழ்வு-ஞான வேள்வியாக
பாசத்தை அள்ளிப் பொழிந்த குரு
அன்பின் கற்பகதரு

கால வெள்ளம்-உறவுகளை அடித்துச் செல்ல, பிரிவின் வேதனை
நெஞ்சை நெருப்பாய் சுட, கண்ணில் நீர் எழுதி-நெஞ்சில்
நினைவை எழுதி, வாச முல்லையை, பாசமலராய் வாழ்ந்த
ஆசான் உறவை எண்ணி அழும் சின்ன மனம்

என்ன கிளி என-செல்லமாய், செவி இனிக்க,
நெஞ்சம் குதூகலிக்க வாஞ்சையாய் அழைக்க
இனி யாருமில்லை, வண்ணக்கிளி இல்லாத உலகோ
வரண்ட பாலையான நிலை

எண்ணிட இதயத்திலோ பொங்கிடும் சோக அலை-
சொல்லியழ வார்த்தையின்றி சொல்லிடும்
கவிதையிலும் முகாரியின் அவலநிலை.

ஆடிப்பாடிய வாழ்வு இயக்கவியலாக, ஆனந்தக் கண்ணீரும்,
சோகக்கண்ணீரும் வடித்த நிலை- நீர்நிலையிலாக
பாடையில் போகும் நிலை- நிலையிலாக
மரணம் வாழ்வில் மாறாத ***திருப்புத்திறனானதோ?*** !

அந்தியில் ஒரு நாள் கல்லூரியில் கண்டவர் கண்கள் கலங்கிட,
விதி வலிது மகனே-உன் உயர் கல்வி தடையானது
விதியின் செயலே, உன்னால் அறிந்ததேன் விதியை,
மதியால் வெல்லாம் என்பது வெறுங்கனவே

செல்வமிருந்தும்-பிள்ளைச் செல்வங்களை மீட்க
செல்வமிழந்தேன், பிள்ளைகளோ என்னைப் பிரிந்து
நாடு கடந்தே உயிர் பிழைத்தார்
வலிது வலிது விதி வலிதே கலங்காதே மகனே

தந்தையாய் ஆறுதல் சொன்ன மாமனிதர்
மறைந்த மாயம்தான் என்ன?
மனமுடைந்து நான் அழத், தெய்வமே
சோதனைதான் என்னே!

மண்ணில் இறைவன் தன்னை விதையாய் விதைத்தே
மனிதனைப் படைத்தார்-வார்த்தை முளைத்திட-
வாழ்வு செழித்திட வாழ்ந்தவர்- மனித மனங்களில்
அன்பால் நிலைத்தார்-வார்த்தையைப் புறந்தள்ளி-உலகை
தனதாக்கி வாழ்ந்தவரோ தம்மை இழந்தார்

***மானிடரில் அரியரத்தினம்-மாசற்ற மனமோ
நவரெத்தினம், வாழ்க வாழ்கவே
அமரர் ஆன்மா அமைதியில் சாந்தி காண்கவே***

***எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க***
Pax Ravichandra-10-10-2023

பாசமலர்-விக்கி



என் பொன் வானத்து வெண்ணிலவை கருமேகம்
மறைத்ததுமேனோ?என் தேவகானத்து பூங்குயிலை
காலன் அகாலமாய்க் கவர்ந்ததுமேனோ?

வண்ணப் பூவாய் மலர்ந்தவனே- வாடி உதிர்ந்திட
பொன் வானாய் விரிந்தவனோ மடிந்து மறைந்திட
தள்ளாடும் என் உயிர்மூச்சு -அல்லாடும் என் இதயம்.

தேனாய், வான் அமுதாய் இனிக்கும் அரியநட்பு
விண்ணாய், மண்ணாய் விசாலமான உன் அன்பு

ஆயிரம் கண்ணாடி மணிகள் நடுவில்
அற்புத வைரம் நீ
ஆயிரம் காகிதபூக்கள் நடுவில்-
என் இதயம் சூடி மகிழ்ந்த ரோஜா நீ

பொழுது சாயுமுன் என் வண்ணப் பூவே
நீ வாடிப்போனதுமேனோ?
விழுதாய் எனை தாங்கிய-உறவே
எனை தனியே விட்டு பிரிந்ததும் ஏனோ?

நா சுவைக்க அறுசுவையும்-தினம்
நான் சுவைக்க அருஞ்சுவையாய் நட்பையும் ஈந்தவனே
நீயில்லாத என் உலகோ -நிலவில்லா வான் ஆனது-
உன் நட்பில்லாத என் வாழ்வோ முள்வனமானது

ஐயனே, என் ஆருயிர் நண்பனே
வான்கொண்ட விண்மீன்களும்-தேன் கொண்ட
வண்ணமலர்களும் வாழும்வரை, என் நேசம் மாறாது
என் நெஞ்சம் உன்னை ஒருபோதும் மறவாது-

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-10-2013

என் பிரியமானவனுக்கு





இறைவன் தந்த இன்பக் கொடை நண்பா நீ எனக்கு
காலங்கள் பல போனபின்பும் குலையாத கற்பு
ஆண்டுகள் போனபின்பும் அழியாத கோலமாய்
கலையாத கனவாய் நம் நட்புறவு

கிளைகளாய் பிரிந்தாலும்
வேறு திசைகளில் வளர்ந்தாலும்
ஒரு வேரில் நிலைத்த அன்புறவு

பிறவாமை வேண்டும்-மீண்டும்
பிறப்புண்டேல் நின்னை,
மறவாமை வேண்டும் என் வரமாக
உன் அன்போ தேவாமிர்தம்

உன் வீட்டின் அறுசுவையை என்னோடு
பகிர்ந்தாய், உன் ரம்மழன் பெருநாளை
நானும் கொண்டாட, சகோதரனாய்
என்னை அரவணைத்தாய்

உன் பிறந்த நாள் இன்று, எனக்கு அதுவும்
ஓர் புனித நாள், என்றும் இன்பமாய் வாழ-
எல்லாம் வல்ல அல்லாவின் அருள் நிலைத்திட
மனதார வாழ்த்தும் உன் நண்பன்

சுபான் அல்லா
மாஷா அல்லா

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra